உ

சிவமயம்.

தொண்டமண்டலசதகம்.

ஓஃது

ப்டிக்காசு புலவரால்

இயற்றபட்டது.

கதருசவு ஜனவரிமீ

ம - ரா - ரா - கனம்பொருந்திய

தொண்டமண்டலம்

துளுவவேளாளர்களைற்படுத்திய,

இயற்றமிழ்ப் போதகசாலை

இரட்சகர்த்தராகிய

கொண்ணூர்

ஐயாசாமி முதலியாரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

சிதம்பரம்

இராமலிங்கபிள்ளையவர்களாற்

பரிசோதிக்கப்பட்டு.

இந்துபிரஸென்னும் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இராட்சசஞ பார்கழி மீ

1915

இத்தொண்ட மண்டலசதகஞ் செய்தபுலவர்செங்குந்த மரபிற்றோன் றிச்சிவானுக் கிரகத்தால்- தமிழ்க்கலை முழுதும்பயின்று தெய்வீகம் விளங்கிய நல்வாக்கினைப் பெற்று சிதம்பரத்தில் - நடேசர் பொன்பணம் ஐந்து - பஞ்சாட்சரப் படியில் - வைத்தருளக் கொண்டு - அதனாற் படிக்காசு புலவனென்று பெயர் பெற்றவர்.

இந்தப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் பெத்தி நாயகன்பேட்டை மூல்லாதெருவில் - இயற்றமிழ்ப் போதகசாலை ஆமாத்தியர்களி லொருவராகிய - சென்னப்ப நாயகன் குப்பம் பாலசுப்பிரமண்ணிய முதலியாரிடத்தில் விலைகொடாமற்பெற்றுக் கொள்ளலாம் புறதேயத்தி லுள்ளவர்கள் - கடிதமூலமாய் ஊர் பெயரும் - நாமதேயமும் - விபரமாகத் தெரிவித்தாற்கொடுத்தனுப்பப்படும் - தபால் - செலவு தாங்களே கொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டியது.

சுப்பிரமண்ணியர் துணை.

சாற்றுக்கவிகள்

[redacted]ஞ்சீபுரம்

வித்வான்

சபாபதிமுதலியாரவர்களியற்றிய

அகவல்.

சீர்வளர்மேருத்தென்பாற்திசையில் *
பேர்வளர்நாவற்பெருந்தீவத்தொளிர் *
தொண்டைநன்னாட்டுவாழ்துளுவவேளாளர் *
கண்டமுத்தமிழ்க் கல்விச்சாலைப் *
பாலனத்தலைமைபரித்துளவள்ளல் *
கோலமிகுத்தகொன்றையம்பதிமால் *
உமைகரநதிருமொழித்துங்கன்சைவத் *
தமைவுறுமன்பனவர்குவளைத்தார் *
மார்பன்முத்தையவமொழியன்றேனு *
கார்தருநிகர்கொடைக்காவலனுவலர் *
பொய்யாமொழியார்புகழ்தமிழாகரன் *
அய்யாசாமிவேளகத்துவிருப்பம் *
மருவுறத்தொண்டைமண்டலத்திலக்கணை *
வரிவடிவத்துவனையாவண்ணம் *
அரிறபநாடியமைத்தனன்பலகலை *
தெரிதருமுணர்ச்சியன்சிவனருள்புனையும் *
மாறுமுவன்பன்மனமாசகன்றேன் *
தேறுவாருளத்துத்திகழ்ந்தயன்முதலோர் *
தெரிதற்கரியசிதம்பரநகரிற் *
பரிவுறுபுலமைப்பண்பன் *
இராமலிங்கமெனும்பெயரோனே. *

ம-ரா-ரா-ஸ்ரீ-புதுவை-சுப்பராயமுதலியாரவர்களியற்றிய

விருத்தம்.

தொண்டைமண்டலத்தைத் தொண்டைமண்டலமாச்சிரஞ்சீவி
றங்கொடுத்திரியத், தண்டமிழியலின்விரித்துரைவிளங்கத்தாந்த
னலகில்வேதாந்தத், தெண்டிசையறிவாம்பரீமியாற்கடந்துசித்தி
ம பொறிசெலாதடக்கும், அண்டரும்புகழ் மிராமலிங்கப்பே
ரறாநதேசிகனே. *

மகாமகா ஸ்ரீ-புரசை அஷ்டாவதானம்
சபாபதிமுதலியாரவர்களியற்றிய
மேரிசை [illegible]பூசியப்பர

மாடணி துதைந்தகாமருநெடுங்கடம் *
ரூனையுடுத்தமாநிலவரைப்பிடை *
மீயழனுண்மேதகச்சூழ்தாவலந் *
தீவிற்கொழிதமிழ்ச்மவுநன்னாட்டில் *
வாள்மீரூய்புகழ்றாஞ்சான்மீரூருடைத்தென *
வெவ்வைவூதட்டியாய்ந்துழுப்பணித்த *
வெவ்வளங்கட்குமிருக்கையென்னிலை இ *
மன்னியதொண்டமண்டலசதகம் *
பன்னியபொருஞ்சீர்ப்படிக்காசுப்பெயர்க் *
கவிஞன்சொற்றதன்கவினெலாமெளிதிற் *
புவியுளோருணர்வான்பூத்தகங்கனிவு *
ளனுதவுறுபுகழ்த்துரைவவேளாளர் *
நீங்கருநலனெலாமோங்கியசென்னையின் *
மேதகவமைத்தகோதலியற்றமிழ்ப் *
போதகசாலைபுரக்கும்புரவலன் *
மாங்குயின்மடவார்மேதங்குயிற்றிரூக் *
கற்பனநும்பும்பொற்பார்செந்நிறத் *
தடந்தளிர்பொதுளியநெடுந்தழையகின்மிசை *
மீமவாப்பலகாற்கூவாப்பயில்வுறு *
மன்றலந்தண்டலைக்கொன்றைபம்பியின *
நதிகுலந்தருமூத்தையநரபதி *
சதுர்பெறுதனையன்றுரூவனைத்தா *
ரணிமலைமார்பகத்தையாசாமிமா *
றநெகுகமஞ்சாற்றுநார்பாத *
திருமையுந்தருமவையியலுறவுளற்றநர்க் *
கொருபெருந்தலையாயுபகாரசிகாமணி *
மருவுமானந்தவல்லிகளிக்கு *
நீராமயற்பாவுமாமலிங்கப்பெயர்ப் *
புலமையோனன்குபரிந்துளங்கொள்ளுபு *
தொலைவறநெடிதுசொற்பொருணோக்கி *
வழுவாவியலின்வினைந்தீண் *
டெழுதாவெழுத்திலிட்டினிதுரைத்தனனே.

மா-ரா-ஸ்ரீ-விருத்தாசலம்

தியாகராஜகவிராஜரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நிலையுங்கலையுணர்ம்புலவாநிலையுங்கண்டான் *
நிலைகண்டான்தமிழின்கடற்கரையைக்கண்டான் *
யெனவாடகச்சிலம்பைச்சிலைத்நிடவேவங்கிச் *
த்தொருமுப்புரவிரைச்சிரித்தெழுந்தநாதன் *
யெனமேவார்ந்தன்மேலுன்றன்றிருப்பஞ் *
யமாண்பொறைஞானந்தருராமலிங்க *
யநாவலன்றிருண்டமண்டலமென்றேபோர் *
னுன்புதிதொருநிச்சயங்கொள்வாரோ. *

தொண்டமண்டலசதகம்.

ஒருவாதிதனிலக்கணம்விரிக்கின்றும்.

இஃது,

மூவகை மொழி - இரு வகைச்சந்தி - முத்திறத்தொகை ஒருதலை நோக்க-முந்நிலை யிலக்கணஞ்செந்நிலத்தொடர்.

மூற்பாட்டியர் பொருட்டலைமையுடை யதினிலைமை, இடைப்பாட்டிடைய துரிமையுடைமைநிலைமை, பிற்பாட்டுடைமை யுரிமையுடையது டைமையாய, இத்தொடரைச் சொற்றிறந்தோன்றத்தொடர் பின்மைசெயின் - தொண்டன் - மண்டலம் - சதகம் - என்றுசெய்க.

இதனுள்.

தொண்டனென்பது.

வழக்கியற்பாடு - ஒற்றுமைச்செறிவு
வேற்றியற்காரணம் - குறிப்புயர்நோக்கம்
பொருள்விரியாக்கம் - குற்றியலுவண்ணம்
இடைப்பல்வயிற்றொகை.

முதலியசொல்லியற்பாகுபாட்டினமைந்த - முதலொகை சிறப்பு யர்திணைக்காரணப்பொருட்பெயர்.

மண்டலமென்பது.

வடசொன்னூக்கியற்காரணப்பண்புகோளிடப்பெயர்.

சதகமென்பது.

வடசொற்பாட்டியற்காரணவெண்ணிலக்குழூஉக் கோட்பெயர்.

இத்தொடர்க்கண்

இயைபின்மையிற்பொருள்கொளின்.

தொண்டன் - ஆதொண்டன் - மண்டலம் - வட்டம் - சதகம் - ற்றிலாயகூட்டம் - என்றுகொள்க.

இயைபுண்மையிற்பொருள்கொளின்

தொண்டன் - ஆதொண்டனென்னுமோரரையன் - மண்டலம்-

இருபதின்காதவெல்லை வட்டமாயநாடு - சதகம் - நூறுசெய்புட்க ளாலாயகூட்டம் - என்றுகொள்க

பொருத்தவியைபிற்பொருண்முடிபுகொளின் ஆதொண்ட னென்னு மாயனுலாளபட்டவிருபதின்காதவெல்லைவட்டமாயநா ட்டின்வண்மையைக் குறித்தநூறுசெய்புட் கூட்டத்தானையேர்வ கையாப்பென்றுகொள்க.

இங்ஙனம்வழங்கல்.

சொற்சுருங்கியல் - பொருளாழ்பியல் - குறிக்கோளியல் - தொகையின்பம்-அளவிசைப்பாடு- பல்வயின்வழக்கு - ஒருங்கிய லுடைமை-முதலியதோன்றக்காரணம்பற்றிய பெயர்க்கோள்களேவழ ங்குவிக்குங்கலேவல்லோர்கண்ணியநிலை யென்றுணர்க - இஃதின்னு ம் விரிக்கிற்பெருகும்.

இதனுள்

தொண்டமண்டலமென்பதனியலேவிளங்கவுத்தணர்த் துகவெனின்.

ஆதொண்டந்தழையயிற் கிடத்தப்பட்டதனுலாதொண்ட னெனக்காரணக்குறிப் பெயரோற்றுஇரவிமரபின்கண்ணேறிறைமக னுலாளப்பட்ட வெதிரிலாட்சியுடைமையின் இப்மண்டலத்திற்கு தொண்டமண்டல மெனப்பெயர்வழங்கிற்று.

இனி - ஆதொண்டந்தழை யானுமலரானுமியற்றியதொ ங்கலணிந்தமையின் - ஆதொண்டனெனப்பெயர்வழங்கிற் றென்பா ருமுளராலோவெனின்.

அங்ஙனங்கூறினுமிங்ஙனம் வழங்கலொத்தநிலையென்க.

அற்றேல் - ஆதொண்டந்தழையயிற் கிடத்தப்பட்டவனை ஆதொண்டனென்று குறியீடுசெய்த லெங்ஙனமெனின்.

மேற் கலேவல்லோர் கண்ணிய நிலையென்றுமதனு ணர்க வென்க.

அன்றி - கடப்பந்தழையயிற் கிடத்தப்பட்டவனைக் கடம் பனென்றும்.

வேப்பந்தழையானுமலரானுந் தொடுத்த தொங்கலணி தோனை வேம்பனென்றும் இங்ஙனம் பலபடவழங்குங்காரணக்குறி ப்பெயர்கள் பலவுள வவற்றுற்றேர்ந்து தெளிகவென்க.

அற்றேல் - ஆதொண்டன்மண்டலமெனல் வேண்டும் - தொண்டமண்டலமெனல் - எங்ஙனமெனின்.

நிறுத்தமொழிக்கண்ணீற்றுச்சிறப்புயர்திணையாண்பாற் படர்க்கை விகுதியாய - அன்னென்பதனகர மெய்குறித்துவருகிளவியோடந்நிறுத்தமொழி பிளவுபட்டிருசொன்னீர்மையிற் பொருந் தாப்புணர்ச்சியாம்ப்டணர்ச்சியின்பம் பெறுமைநோக்கி யஃவையொன்றுபட்டொருசொன் னீர்மையிற்பொருத்தப் புணர்ச்சியாயிப் புணர்ச்சியின்பம் பெறற்பொருட் டொத்தகிழத்திக்குங் கிழவோற்கும் புணர்ச்சியின் பந்தோன்றற்பொருட்டகன்றுநிற்குமுயிர்ப்பாங்கிபோன்றதன்று நிற்பவும் - நிறுத்தமொழிக்கண்முதனிலை வேற்றுமையொற்றுமைவிரவுறப் பாகாரம் - பல்வயின்வழக்குத் தொகையின்பமுதலியநோக்கித் தொகுக்கப்பட்டிந்தொகாவியலின் ஞாபகவிடையவுருவினருகிக்கண்ணுற்றுநிற்பவும் - தொண்டமண்டலமென்றுவழங்கிற்றென்க.

இஃது.

இருவயிற்றோற்றம் - சிறப்பாட்டியுடைமை-பொருளடைச் சேர்பு - ஒற்றுமைச்செறிவு - ஒத்திசைப்பேறு- நுனித்துணர்புணர்வு - முதலியநோக்கியலைப் பெற்றுத்தேயவழக்குச்சிறப்புடைச் சொற்றொடரிற்போந்தகாரணகுறிப்பெயரென்க - தொண்டமண்டலமெனிற்காரணக்குறிவிளங்கப்புலப்படவின்றுலோவெனின்.

மேற்சொற்சுருங்கியன் முதலிய குறித்து வழங்குவித்தல் கவிஞர்கண்ணியநிலை யென்றும்- ஆதலிற்கூர்ந்தறிகவென்க.

கூர்ந்தறிதற்றன்மையது செய்யுள்வழக்கேயன்றிப்பாடை வழக்குத் தேயவழக்குமுதலியவன்றுலெனின்.

இத்தொண்டமண்டலமென்பது- செய்யுள்வழக்குமுதற் பல்வகை வழக்கினும் பயின்றுவரலானு முற்காலத்ததன் றிப்பிற்காலத்துக்காரணக்குறியாக்கப் பெயராய் வழங்கலானும் - புறப்பாட்டிற் பொருண்முடி புவல்லு நரல்லார்க்கும் விளங்கப்புலப்படுத்தலானு மதனகப்பாட்டிற்செய்கைமுடிபு முதலிய வியன்மாத்திரையே கூர்ந்தறிகவென்றுமென்க.

இஃது.

செய்யுண்முதலிய பல்வகைவழக்கினும்பயின்று வருதன்

முதலிய இச்சதகயாப்பின்கண்ணும் காஞ்சிமான்மியத்தைக்குறித்த காப்பியமுதலிய வற்றின்கண்ணும் - பாடை வழக்குத்தேயவழக்குநகர்வழக்குமுதலிய வழக்கியற்கண்ணும் - பல்வகைப் பெயர்க்குமிலக்கணம் புலப்படுத்தற்கருவியாயமுந்நூன் முதலிய நூன்முடிபின்கண்ணும் - வழக்குணர்ச்சிக்கண்ணுங்காண்கவென்க.

அறமேற்கூர்ந்தறிகவென்றவகப்பாட்டிற்செய்கைமுடிபுமுதலியவிளங்கப்புலப்படுத்துகவெனின்.

பயன்றரூஉந்தொழிலதுபுடைபெயர்ச்சிக்கண்ணுரிமைதோற்றியுரிமையுடைமைக்குமுதலாயமுதற்பொருளெஞ்சிநிற்ப- அம்முதலாயமுதற்பொருட்டொழின்முடிபினேற்றதன்முறைமிற் பயனுறுதற்கிடனுயசெப் பொருளம்முதற் பொருணோக்கிய லொருபுடை யொப்பத் தொழிற்பயன்மேற்றற்கிடனுயதரப் பொருள்வேற்றுரிமையேற்றுத்தன்முறைமின்முடிபின்முற்றிப்புடைபெயர்ச்சியினுரிமைபெற்றமுதற்பொருண்மையினெப்புமைபெற்றுத்தன்புடைபெயர்ச்சியினுரிமையேற்றுவேற்றுரிமை முதற்பொருட் கரணத் தொழிற்பயனுறப்படுஞ்செய்பொருளுத்தன்கருமத்தினுழிற்பயனுறப்படுஞ்செய்பொருளாப்புடைபெயர்ந்ததனுரிமையேற்றமுதலாயமுதற்பொருட்பாடுபெற்றும் - வந்தவிரிசொற்றெரிநிலவினமுற்றுணைந்தபெயர்க்கோணிலைநோக்காய - ஆதொண்டந்தழையிற்கிடத்தப்பட்டவன் ஆதொண்டைத்தழையிற் கிடத்தப்பட்டவன் ஆதொண்டந்தழையானு மலரானுமியற்றப் பட்டமாலையைத்தரித்தவன் - என்பன - தன்வினைமுதற்றொழிற்பயன்மேற்றுமிடனுந் தன்றொழிற்பயனுறப்படுஞ்செய் பொருளுமிடனுக - ஆதொண்டந்தழையன் - ஆதொண்டைத்தழையன் - எனவிரிசொற்குறிப்புவினைமுற்றுணைந்தபெயர்க்கோணிலை நோக்காய்ப்-பின்னர் - இடப்பொருளவயவியுங்கருவிப்பொருளவயவியுமிடனுகப்பெற்று, ஆதொண்டையென் பதனீற்றைகாரங்கெட்டஃதார்ந்தமெய்ம்மேல்விகுதி அன்னுர்ந்துஆதொண்டன்- எனக்குறுந்தடியுஞ் செம்பட்டுமாயவாறு போற்றொகைநிலையேற்றுப் பெயரோயாய்நின்றது.

அல்லதூஉம் ஆசிரியர்தொல்காப்பியர்கூறிய - பனையுமனையுமாவிலைக்கிளவியு, நினையுங்கால - யம்மொடுசிவணு, மையெ

னிறுதி . யாவனாந்தகெடுமே , மெய்யவனெழியவென்மனுர்புல வர் - என்னுஞ்சூத்திரத் துணினேயுங்கால் யென்பதனுற்றழை யென்னுஞ்சொல்வந்துழி - தொண்டையென்னுஞ் சொல்லிறுதியை காரங்கெட்டஃதூர்ந்தமெய்ம்மேலும் முச்சாரியையூர்ந்துநின்றதன்றே - அங்ஙனம்-உயர்திணையாண்பாற்படர்க்கைவிகுதியாய-அன் னென்பதனேயேற்குமிடத்தத்தழை யென்பதெஞ்சியத்தழையிற் கிடத்தப்பட்டவனென்றறிந்து கோடற்குறியாத்தழையாற்போந்த அம்முச்சாரியையின்-மகரவொற்றுநீங்கநின்றஅகரத்தின்பின்னர்- அவ்வுயர்திணையாண்பால்விகுதி அன்னென்பதினகர நீங்கநின்ற னகரவொற்றடித்துஆதொண்டன் என்றுயதனினுமமையும்.

இதனை.

முதனிலை - இறுதிநிலை - இடைநிலை - முதலியபல்வகை யுறுப்புக்களிற்பல்வகை நோக்குடைப்பல்வகைப்பெயரும் - செறிப்பிற்றிறப்பட நெறிப்படுஉம் வழக்கிற்பல்வகைவிகாரத்தாற் செந்நிலைபெறாஉ மெனவிதித்த வுணர்வுடையோருயர்நெறிவழக்காலுய்த்துணர்க.

இங்ஙனம்.

ஆதொண்டனென்னும்பெயர் - முதற்பொருண்முடிபுதன்முடிபிற்பெற்றதன்றொழிற் பயனுறப்படுஉஞ் செய்பொருட்டன்மையகப்பாட்டினும் - உடைப்பொருட்பிறிதினிமையுடைமைத்தன்மைபுறப்பாட்டினும் - உயர்பொருளடைச் சிறப்பிடப் பெயர் அவ்விருவயினும் பொருந்தநின்ற மண்டலமென்பதனே டுமருவும்வழி - மேல்வகுத்த வண்ணந்தன்னிறமுதலுந் தொகுத் தலிப்பெற்றதென்க.

அல்லதூஉம்.

முதலெஞ்சிநின்ற - இப்பெயர் - மண்டலத்தோடணைந்தவழி விகுதி - அன் - எஞ்சி - அம்முச்சாரியைப் பெற்றுவருமொழிநோக்கிமகரமொழியத்தொண்டமண்டலமென்றுயதனினுமமையும்.

இதனை.

ஆசிரியர்தொல்காப்பியர்கூறிய - அப்பெயர் மெய்கெடுத்தன் கெடுவழியு, நிற்றலுமூரித்தேயம் மென்சாரியை, மக்கண்மூ

றைதொகூஉ மருங்கினன - என்னுஞ் சூத்திரநோக்கத்தாற்காண்க வென்க.

ஆதொண்டனென்பது - தென்சொன்னெக்கு மண்டல மென்பது - வடசொன்னெக்கு- தம்முட்செறிவானெத்தவேனும் பாடையானெவ்வா மைபெறலின் - அங்ஙனம் பெருமை நோக்கியும் - முந்நிலையாய வந்நிலைக்குப்பின் னிலையாயவிந்நிலைக்கு மிலை ச்சினையாதலெக்கியும் - விசேடணவிசேடியச் செந்நிலைமரபு நோக்கியும் - இங்ஙனமூதலு மீறுந்தொகுத்தலைப் பெற்றதெனி னும் - முதனிலைவண்ணவொற்றுமை - இசையொற்றுமை - உரு பொற்றுமை நோக்கியும் - இறுதிநிலை - சிறப்புநிலை இனவொற்று மை நோக்கியுந் தொகுத்தலைப்பெற்றதெனினுமமையும் - இஃதி ன்னுங்கூறிற்பெருகும்.

ஆகலின்.

ஆசிரியர்தொல்காப்பியர்கூறிய - உணரக்கூறிய 'புணரிய ன்மருங்கிற், கண்டுசெயற்குரியவைகண்ணினர்கொளலே'என் னுஞ் சூத்திரக்கருத்தானமைகவென்க - அன்றி - ஆதிநாராயணன்புரம்- நாரணபுரம், ஆபூதன்மங்கலம் - பூதமங்கலம் - பெரும்பற்றினூற் புலிப்பாதன்பூசித்தவூர் - பெரும்பற்றினூற்புலி பூசித்தவூர் - பெ ரும்பற்றப்புலிபூர், புலிபூர், முதலிய பெயர்க்கோள்களையும் - புள் ளம்பூதன்குடி- பூதங்குடி, கொற்றன்குடி, கொற்றங்குடி-சாத்தன் குடி - சாத்தங்குடி, கொற்றன்மங்கலம் - கொற்றமங்கலம்-சாத்தன் மங்கலம் - சாத்தமங்கலம், வேடன்மங்கலம், வேட்டமங்கலம் வேடன்குடி - வேட்டங்குடி, சாத்தன்மங்கை - சாத்தமங்கை, விஜ யன்மீங்கை - விஜயமங்கை, கண்ணன்மங்கை-கண்ணமங்கை, கண் ணன்புரம், கண்ணபுரம், கண்ணன்குடி-கண்ணங்குடி, சீராமன்வி ண்ணகரம், சீராமவிண்ணகரம், வரகுணன்மங்கை- வரகுணமங் கை, ஐயைபுரம் - ஐயபுரம், முதலிய பெயர்க்கோள்களையும் நந்தன்மண்டலம் - நந்தமண்டலம், சேரன்மண்டலம் - சேரம ண்டலம், சோழன்மண்டலம், சோழமண்டலம், முதலியபெயர் க்கோளையும்பற்றுகக்கொண்டமைகவென்க, இதனைப்பிற்காலத்து மறுஉவழக்கென்று கொள்வாருமுளராலோவெனின் - அங்ஙனம் - கொள்வது மரபன்று-கொள்கிலுங்கொள்கவென்க.

இத்தொண்டமண்டலமென்பது - பல்வகைப் புணர்ச்சிக் கும் - பல்வகைவழக்கியற்கும் - இயற்பாடின் றொகைமுதலியவற் றிற்கும் - ஒத்தநிலையென்க.

இங்ஙனமன்றி.

தொண்டை மண்டல மென்பாரு முளராலோ வெனின் .

அங்ஙனமாறு படக்கூறுவோர் - நுண்ணிய அறிஞர் கண்ணிய நிலையும் - மாற்றம் பொருளுறா உமாற்றனிலையும் - பல்வகைப் புணர்ப்பிற் செல்வகைநிலையுங் - கடிபுகோணெறியின் முடிபுறாஉநி லையு - மிழுக்கறாஉம்பல் வகைவழக்கியனிலையு - மொருவாற்றானு மோர்ந்துணர் கிலராய்ப் - போலியியனிலை கோலுதலென்க, என் னை, இலக்கணநுட்பங் கூர்ந்துய்த் துணர்தற்றன்மை யுளலேலங்ங னங் கூறற்கியை யாராகலின்.

அவர்சிலவழுஉநெறி வழக்குப் பற்றிக் கூறுதன்மாத்திரைய ன்றி விவகரிக்கக் கடவரல்லர்.

ஆயினும் , அவர்க்கு மற்றவர்க்கும் - அவ்வழக் கழிவழக்கேய ன்றி யிழிவழக்குமா மென்றுணர்ச்சி தோன்றற்கியாமே - அத்தலை க் கண்ணின்றவர் கூற்றுக விவகரித்த தினைமறுக்கின்றும் -

அவர்கூற்றுகவிவகரித்தல்

தொண்டைத் தழையானு மலரானுமியற்றிய மாலையணிந்தவனுண் டமண்டலமாகலின் - தொண்டைமண்டல மெனல்வேண்டும்.

அதனைமறுத்தல்

தொண்டைமண்டலமெனின்

கொவ்வைத் தூற்றையுடைய மண்டலமென்றும் - ஒருவாறு ஆதொண்டைத் தூற்றையுடைய மண்டலமென்றும் - தெளிவின் றிக் கருதப்படுவதன்றித் - தொண்டைத் தழையானு மலரானு மி யற்றிய மாலையணிந்தவனு லாளப்பட்ட மண்டலமென்று கருதப் படுவதன்று.

அல்லதூஉம்.

சேரன்மண்டலம் - சேரமண்டலம், சோழன்மண்டலம் - சோழமண்டலம், என்பனபோலிம் மண்டலத்திற்கு - முன்னர் தண்டீரனுலாளப் பட்டமையின் - தண்டீரன்மண்டலம் - தண் டீரமண்டலம் , தண்டீரன்புரம் - தண்டீரபுரம் - என்றும் - பின்

னர் - தண்டகனுலாளப் பட்டமையின் - தண்டகன் - நாடு-தண்டக னுடு - தண்டகன்புரம் - தண்டகபுரம் - என்றும் - பெயர்வழங்கி ன - அவைபோல் - அதன்பின்னர், ஆதொண்டனுலாளப் பட்ட மையின் - ஆதொண்டன்மண்டலம் - ஆதொண்டமண்டலம் - தொண்டன்மண்டலம் - தொண்டமண்டலமென்றே மரபுவழுவா மை வழங்கல்வேண்டும் .

இதற்குப்பிரமாணம்

முக்கனுன் கணதாதர்க்கு முதன்மைத் தண்டீரனுண்டு மிக்க தண்டீரனுடாய்த் தண்டகவேந்தன்றுங்கித்.

தக்கதண்டகனன்னுடாய்த் தபனன்மா குலத்துச் சோழன் றெக்க தார்த்தொண்டமான் காத்தாயது தொண்டனுடே.

இங்ஙனம், பல்காப்பியங்களினும் பலபிரபந்தங்களினும்- பி ரபலவித்துவான்களாக முன்னிருந்த - ஒளவையார் - கம்பன் - ஒ ட்டக்கூத்தன் - முதலானேர்கள் - பல்வகைக் காரணங் குறித்துச் செய்தபல்வகைச் செய்யுட்களினும் - கண்டு - முனனும் பின்னு ம்வருத்தமைக்குப்பிரமாணங் களிருக்கின்றன - அவைகளேவிரிக்கி ற்பெருகும் - ஆகலின் - அவற்றைத் தனித்தனி காண்டொறுமா ங் காங்குணர்ந்தமைக.

அங்ஙனமன்றித் தொண்டைமண்டலமெனின் -

சான்றோர்வழித்தாய மரபுவழுவியமையுவதூஉமன்றிக்-காஞ்சி விருக்க முடைமையா னந்நகருடைவளாகத்திற்குக் - காஞ்சிமண் டலமென்று வழங்கிற்று - அங்ஙனமே - தொண்டைத்தூறுடை மைபற்றித் தொண்டைமண்டலமென்று வழங்கிற்றிஃதேதுணிபு என்றுரிபுதோற்றும் .

அன்றித்.

தொண்டைத்தழையானு மலரானு மியற்றப்பட்ட தொங்கல ணிந்த வோரரையனுலாளப்பட்ட மண்டலம் - அவ்வரையனுக்குரி மை தோன்றநிற்றலின்றிப் பரம்பரையானன்றி யிடைப்பாட்டாற் பெற்றஅத்தொண்டையை வேற்றுரிமையாகப்பெறற்கு - எவ்வா ற்றினும் - பொருத்தமின்று - இதனைக்கல்வியிற் சாதாரணத்தன் மையுடையோரும் - வாதராயண சம்பந்ததினம் போலுமெ ன்று - எள்ளுவர் - அன்றிக் - குமரியைக்கொண்டவனவிட்டுக் கூட

வந்தவேளுடு கூட்டியனுப்பிய தூபோலுமென்றசதியாடுவர் - என்னின் - கற்றுவல்லோர்முகப்பின்.

இஃதென்னும்

இதன்கண்- உரிமைமலைவு - பொருண்மலைவு - மரபுமலைவு - வழக்குமலைவு - தகுதிமலைவு - உணர்ச்சிமலைவு - யூகமலைவு- நியாயமலைவு-கருத்துமலைவு- முதலியமலைவின்றொகையேபுலப்படுகின்றன ஆகலின் - தொண்டைமண்டல மெனலமைவன்று.

தொண்டமண்டலமெனல்வேண்டும்.

அவர்கூற்றுகவிவகரித்தல்

அஃதேல்

அற்றன்று - பாண்டியன் மண்டலம் - பாண்டிமண்டல மென்றுயதுபோல் - தொண்டையன் மண்டலம் - என்பது - விருதிஅன் கெட்டுத் தொண்டைமண்டலமென்றுயது - ஆகலிற் - றொண்டைமண்டலமெனல்வேண்டும்.

அதனைமறுத்தல்.

பாண்டியன் மண்டலம் - பாண்டிமண்டல மென்றுயது - மருவுவழக்கு - இஃதங்ஙனமன்று மருவுவழக்காயினும் - பாண்டியென்பது.

குடிப்பெயர்க் கோளாய் - அவ்வனையனையும்ஒற்றுமை யுரிமையாலம் மண்டலத்தையு மன்றி வேறுகுறித்தலின்றி நிற்றலின நிருராலமைத்துக் கொள்ளப்பட்டது - தொண்டைமண்டல மென்பதை - மருவுவழக்கினமைத்துக் கொள்வேமெனின் இங்ஙனங் குறித்தலின்றிப் - பல்வகையானும் வேறுகுறித்துவழுவுநிலையைப் பெறுகின்றது.

என்னை.

தொண்டைத்தழையானுமலரானுந் தொடுத்த தொங்கல்மிஞ் தோனைத் -தொண்டையன் - எனின்-பிற்காலத்தின்மக்கள்-வரலாறுணராமையின் - பெருந்தொண்டையனைத் - தொண்டையனென்றுவழங்கினர்கொல் - அன்றிப் - புழைக்கையுடைமையாற்றும்பிமுகத்தவன்கொல் - என்றையுறுதற்கும்-தொண்டு - ஐயனென்றுபிரித்தேற்றபெற்றி கோடற்கும் - ஒருவாற்றுற் கேள்வியுடையோருங்கொவ்வைத்தழையிற் புனைந்தகாலியுடையன்கொல் - ஆதொண்

டைத் தழையிற்கிடத்தப் பட்டவன்கொல் – என்றையுற்று ம்யங்கு தற்கும் - இடனுய்ச்சொல்வலி-பொருள்வலி - இன்னிசைவண்ணமு தலியசிதைவுறநின்று வழூஉநிலையைப்பெற்று - மண்டலத்தோட ணைந்து - ஐயம் - மயக்கம் - கவர்கோண்முதலிய - இழுக்கினை யேற்றுவழுவினும் வழுவாய்நிற்றலானும் - இங்ஙனம்வழங்கல் அறி ஞர்வழக்கன்றுகலானும் - இதனைவழூஉநிலை யென்றும்.

இஃது.

உடற்றாய்மைகருதிநீராட்டுவந்துசென் றுண்டளற்றினழுத்தி யதொக்குமென்றெள்கு தற்கிடனன்றிச்சிறிது மமைத்துக்கோடற் கிடனன்று.

ஆகலின்.

தொண்டைமண்டலமெனலமைவன்று.

தொண்டமண்டலமெனல்வேண்டும்.

அவர்கூற்றுகவிவகரித்தல்.

அற்றேல்.

தொண்டையென்பது - ஆகுபெயராய்நின்று அரையனையுண ர்த்தியுரிமைதோற்றிமண்டலத் தொடுபுணர்ந்து - தொண்டைமண் டலமென்றுயிற்று-அதனுல்-தொண்டைமண்டலமெனல்வேண்டும்

அதனைமறுத்தல்.

இடைப்பாட்டினியதி யியைபின்றிவந்த-கடம்பூர்- என்பது- கடம்பவிருக்கத்தையுடைய வூரொன்றுதன்னளவே புலப்படுத்துமன் றி - ஆகுபெயராய்க்கடப்பமாலையைத்தரித்தவனூரொன்று - பிறிதளவுபுலப்படுத்துவதன்று - என்னை - ஆகுபெயர் - ஒன்றன்பெ யரானதற்கியைபிறிதைத்தொன்முறையுரைப்பதாகலின் - அங்ஙன மே - பரம்பரையானன்றி - இடைப்பாட்டினியதியியைபின்றிவ ந்த-தொண்டை - மண்டலத்தொடுபுணர்ந்துழி தொண்டையையு டையமண்டலமென்று தன்னளவுணர்த்துமன்றித் தொண்டையை யுடையான்மண்டலமென்று பிறிதினளவுணர்த்தற் கோர்வகையா னும்வலியின்று.

இஃது.

பூகமின்றி.

ஒன்றுகுறித்தொன்று வாயவொன்றுபட்ட தென்னுமுல

வழக்கினம்போலுமென்றெள்குதற்கிடனும் ஆதலிற்றொண்டை மண்டலமெனலமைவன்று-தொண்டமண்டலமெனல்வேண்டும்.

அவர்கூற்றுகவிவகரித்தல்.

அற்றேல்.

தொண்டையுடையனுலாளப்பட்டது தொண்டையென்று - ஈறுகெட்டைவிகுதியேற்றுச்சிறப்புப் பெயராய்மண்டலத் தொடு புணர்ந்து - அங்ஙனமாயிற்று ஆகலிற்றொண்டைமண்டல மெனல் வேண்டும்.

அதனைமறுத்தல்.

ஐயீற்றின் - ஐகாரவிகுதிபோந்துகெட்டுப்புணரிற் - குறியீடின்மையிற்சிறப்பன்று - இங்ஙனம்புணர்த்தல் - இயற்பாடுமன்று - அறிஞர்மரபுமன்று - அங்ஙனமாயினும் - தொண்டையையுடைய தென்றுகுமன்றித்தொண்டையுடையனுலாளப்பட்ட தென்றொரு வாற்றானுமாவதன்று - அன்றிச்சோழமண்டலமுதலியவற்றோடுமு ரணும்.

அங்ஙனமமைதியின்றிக்கூறினுஞ் சந்தியின்பத்தான் - நாகைபட்டினம் - நாகபட்டினமென்றாயதுபோல் - தொண்டைமண்டலம் - தொண்டமண்டலமென்றுதலேவேண்டும் - இதனை முன்னர்விலக்கியவற்றுட்காண்க - இஃது - பல்வகையிழுக்கினுஞ் செல்வகைத்து - இரும்பொற்பூண்டீச்சென்று - கரும்பொற்ற லகைபுகுத்தியதினினமென்றெள்குதற்கிடனும் - ஆகலிற்றொண்டை மண்டலமெனலமைவன்று - தொண்டமண்டல மெனல் வேண்டும்.

அல்லதூஉம்.

இங்ஙனம் - தொண்டையென்பது பல்வகைப் பொருட்கிடனுபெயர்த்திரிசொல்.

ஆதொண்டையென்பது - தன்னளவேயுணர்த்தும் பெயரியற்சொல்.

இங்ஙனம் - திரிசொல்லாற்சிறப்புப் பெயர்க்காரணக்குறிசெய்தல்வழக்கறிந்தோர்மரபன்று.

இயற்சொல்லாற்காரணக்குறிப்பெயரமைத்தலேயவரதுமரபு.

இஃது

ஆதொண்டச்சக்கிரவர்த்தியென்றுவழங்கும் - அறிஞர்வழக்காலறியப்படும்.

அவர்கூற்றுகவிவகரித்தல்

அற்றேல்.

ஆதொண்டையன்-என்பது - மண்டலத்தொடுபுணர்ந்துழி-முதலுமீறுங்கெட்டு - அங்ஙனமாயிற்று - ஆகலின் - தொண்டைமண்டலமெல் வேண்டும்.

அதனைமறுத்தல்.

ஆதொண்டையன் - எனின்.

தொகையின்பமும்-இசையின்பமும் - செறிவுகோளுமின்றிப்புல்லென்கையானும்- சுருங்கியபேரின்பங்குறித்து - முன்னும்பின்னுந்தொகைசெய்தமைத்தசான்றோர் -ஒழுத்தானீட்டியற்பெயர்ப்பாற்படுத்திமுடிபுவழூஉச்செயற்கையாராகலினும் - இங்ஙனம்-தொகுக்கப்படின்-பொருளாட்சிமுதலியகுன்றலின்றிச்செந்தெறியிற்பெரும்பயன்றரலானும் அங்ஙனமமைத்தல் - வழுவேயாம்.

இஃது

ஆதொண்டையன்சக்ரவர்த்தி - ஆதொண்டையச்சக்ரவர்த்தியென்னுது - ஆதொண்டன்சக்ரவர்த்தி - ஆதொண்டச்சக்ரவர்த்தியென்றுவழங்கும் - அறிஞர்வழக்காலறியப்படும்.

அவர்கூற்றுகவிவகரித்தல்.

ஈண்டு

ஆதொண்டைச்சக்ரவர்த்தியெனின்வழுவென்னெனின்.

அதனைமறுத்தல்.

அங்ஙனம்பெறின்.

அவ்வரையற்கு - ஆதொண்டையர்காரணக்குறிப்பெயரமைப்பான்கருதியவன்றேகருதிய தாதல்வேண்டும் - அங்ஙனமின்றிப்பின்னர் - செங்கோன்மை ஆண்மைமுதலியவண்மையுடைமைபற்றிமுகமனுவமைக்கப்பட்டது -ஆகலின்வழூஉ -இங்ஙனமென்க.

ஈண்டு - ஆதொண்டன்சக்ரவர்த்தி - ஆதொண்டச்சக்ரவர்த்தியென்பது-புடைப்புளகன்னிப்பொற்குலக்கண்ணேஇடைப்பிளவியையாவிரட்டைப்பழம்போன்றொருபொருட்டிருவயினெழுந்தி

டைப்பிளவறியாச்சிறப்பினப்பெயர் - ஆதொண்டன்சோழன் ஆதொண்டச்சோழனென்பதுமது.

இதனை.

நசரதன்சக்ரவர்த்தி - நசரதச்சக்ரவர்த்தி - நளன் - சக்ரவர்த்தி - நளச்சக்ரவர்த்தி - புளூரன்சக்ரவர்த்தி - புளூரச்சக்ரவர்த்தி - சோழன்ராஜன் - சோழராஜன் - சேரன்ராஜன் - சேரராஜன் - பாண்டியன்ராஜன் - பாண்டியராஜன் - சோழன்மஹாராஜன் - சோழமகாராஜன் - சைவன்சோழன் - சைவச்சோழன் - குலோத்துங்கன் - பாண்டியன் - குலோத்துங்கபாண்டியன் - சோழன்மன்னன் - சோழமன்னன் - சேரன்மன்னன் - சேரமன்னன் - எனவழங்கும் பல்வகைமுடிபுவழக்குகளாற்றெளிந்தமையப்படும்.

ஆகலின்.

ஆதொண்டனெனல்வேண்டும்,
ஆதொண்டையனெனல்இழுக்கு.

இங்ஙனம் - இழுக்காய - ஆதொண்டையனென்பது - முதலு மீறுங்கெட்டுமண்டலத்தொடுபுணர்ந்து தொண்டைமண்டலமென்ருயிற்றெனினும்.

மேற்குறித்தபல்வகைவழூஉக்கட்கும் பேரிடனுகத்தக்கது - இடனறிந்துபிறண்டாத்தினவுண்ணியெரிவிற்புழுங்கிற்றுஎன்பதற்கும் - கருத்தறியாமற் கலப்பானுகுந்து - அருத்தமிழுக்குமாலென்பதற்குமினமென்று எள்குதற்கிடனும் - ஆகலிற்றொண்டைமண்டலமெனல்வழூஉ - தொண்டமண்டலமெனல்வேண்டும் -

அவர்கூற்றுகவிவகரித்தல்.

தொண்டைக்காடுடைமையாற் றொண்டைமண்டல மெனல் வேண்டும்.

அதனைமறுத்தல்.

இங்ஙனம்.

தொண்டமண்டல வரலாற்றைவருக்குங்காப்பியத் திற்கண்டதேயன்று - இவ்வாறுண்டென்றறிஞரானிது காரியாங்கேட்டதுமின்று - ஆகலின்வழுவாம் .

இஃது - வழிபறியாக்கன்றுகுழிவழியாச்சென்றென்பதற்கினம் - இங்ஙனம்வழியறியாது மொழியினும்பொய்கூறினும் பொருத்தக்

கூறுகவென்னு மிழந்தோர்வழக்கின்கண்ணு மேற்புடைத்தின்று.

என்னையெனின்.

காஞ்சி -தில்லை -என்னுமரப்பெயர்கள் - ஒற்றுமையுரிமைகு றித்து -காஞ்சியைக்கண்டு தில்லையையடைந்தானென்று வழங்கப் படுகின்றது -அங்ஙனம் -தொண்டையைக்கண்டு -என்று -எவ்வகை வழக்கினும்வழங்கப்பட்ட தின்றுகலினென்க - இதனானுந்தொண் டமண்டலமெனல்வேண்டும்.

அவர்கூற்றுகவிவகரித்தல்.

தொண்டைமான் -என்னும்பெயருள்- வேற்றோரையனிருந் ததிகரித்தமையின் -தொண்டைமான் மண்டலமென்பது - மான் கெட்டு -அங்ஙனமாயிற்று - ஆகலிற்றொண்டை மண்டலமெனல் வேண்டும்.

அதனைமறுத்தல்.

இங்ஙனம்புணரினும்,

மேற்குறித்தவழூஉநிலைகட்கிடனும்.

அன்றி.

தொண்டைமானென்பதேவழூ -என்னை - தொண்டைமானெ ன்பதுதனிமொழி -தொடர்மொழி யென்பவற்றுளெம்மொழி -

விடை.

தனிமொழி.

வினு.

தனிமொழியாயின் - இதற்குமுதனிலைஇறுதிநிலை இடைநிலை, என்னை.

விடை.

தொண்டைமுதனிலை -ஆன் -கடைநிலை -மகரம் - இடைநிலை, யாம்.

அதனைமறுத்தல்.

என்னின்.

முதனிலைக்கும் - இறுதிநிலைக்கும் -இடைப்பாடொத்துநிற் பது -இங்ஙனம் வழூஉம் -பெயர்கட்கு -இடைநிலை ஈண்டு - முத னிலை பிற்றைகாரக்குறுக்கம் -விலங்கிப்பொறுத் திசைப்பவிடைப் பாடின்றியிறுதிநிலை யோடிணைந்து வேறுகுறித்தலினிடைநிலையி யலமைவின்று.

அன்னீறன்றி - ஆனீறு - ஆறிறந்தன்றியைநீறிறந்தியையுந் தொடரீமொழிப் பெயர்க்கன்றிஇங்ஙனம் -உரித்தாவதன்று -நடப் பாடின்மையின் - ஆகலின் - இறுதிநிலையியலுமனமவின்று - வி காரத்தால் வேறுகுறித்த லின் முதனிலை யியலுமைவின்று.

அல்லதூஉம்.

இஃதிடைநிலையாயின் - கோமான் -என்பதற்கும் -அங்ஙனம்- இடைநிலையாகல்வேண்டும்.

அங்ஙனமாயின்.

கோ -ம் - ஆன் - இவற்றுள் - கோ-அரையன் - என்னின்-ஆ ன்-விகுதி -அதிகரிப்பின்றி -மூங்கைபோலும்-யானையுண்டகனிபோ லும் - பெயர்ச்சியும்பயனுமின்றிவற்றன்மரனினின்றது -ஆகலின்- இஃது - இங்ஙனமன்று - ஆகலின் - அஃது - அங்ஙனமன்று - இஃது - கைபடலறியான்பொய்படலொன்றேவென் பதற்கினம்.

ஈண்டு -தொடர் மொழியாய்க் - கோன் - மன் - கோமான்- என - நிலைமொழியீறுகெட்டு - வருமொழிமுதனீண்டது -இதனை- வழுதிமன் - என்னுங்காப்பியவழக்கானுங் கண்டுணர்க - அன்றி கோன் - மஹான் -கோமான் - என - நிலைமொழியீறுகெட்டுவரு மொழிவடமொழி யாதலின் - விகாரம்பெற்றுக் கோமான்-என் றுயது - அன்றி - கோன்-மான் - என - நிலைமொழியீறு கெட்டுக் கோமானென்றுயது - இங்ஙனமே - தொண்டன் -மன் - தொண்ட ன் - மஹான் - தொண்டன்-மான்-என்பன- தொண்டமானென்று யது - மன் - மஹான் - மான் - என்பவைக்கு - பெருமையுடைய வனென்பதுபொருள்.

ஆகலின்.

தொண்டைமானெனல்வழு - தொண்டமானெனல்வேண்டும் இங்ஙனமே- சேரன்-மான்-சேரமான்- மலையன்மான்-மலையமான்- முதலியவுங்காண்க - ஆகலின் - மண்டலத்தோடுகூடியவழி - தொ ண்டமண்டலமெனல்வேண்டும் - அனறி -தொண்டனாடெனல்வேண் டும்- தொண்டைநாடெனல் -வழூஉ - என்னை- சேரன்நாடு- சேர னாடு - சோழன் நாடு - சோழனாடு - பாண்டியன் - நாடு - பாண்டி

யனும் - மலையன் நாடு - மலையனும் - என்பதுபோல் - தொண்டன் நாடு . தொண்டனும் - எனல் மரபு -ஆகலின்.

தொண்டனும் -எனில் - அடியனென்ன - முதல்வேறுகுறிக்கு மேயெனின் - அங்ஙனங்குறிப்பதில் - ஆற்றலுமின்று - பயனுமின்று-என்னை-ஆவென்பது - காரணவிடயமாகநின்று - உரியானைக்குறித்தின்ற தாகலின் - அன்றி - உடையானையன்றி - உடைமைகுறித்தலின்றுகலினென்க.

இங்ஙனம் - பல்வகையாற்சொல்வகைசெய்தலென் - தொண்டைமண்டலமெனின் - மேற்குறித்தவண்ணம் - உரிமைமலவு - பொருண்மலவு - மரபுமலவு - வழக்குமலவு - தகுதிமலவு-உணர்ச்சிமலவு - யூகமலவு - நியாயமலவு - கருத்துமலவு - ஐயங்கவர்கோள் - மயக்கம் - வேற்றுக்குறிப்பு - வேற்றுரிமைநிலைமை - நியதியின்மை - இயைபின்மை . சொல்வலிச்சிதைவு - பொருள்வலிச்சிதைவு - பொய்க்கோள் - அனர்த்தம் - இன்னிசைவண்ணச்சிதைவு - பிளவுபாடு - முதலியபல்வகைவழுக்கட்கிடனும்.

அன்றி.

ஆதொண்டையென்பதனீற்றைகாரக்குறுக்கங்குற்றல கேபெற்றது - தொண்டையென்பதனீற்றைகாரக்குறுக்கங்குற்றலகோ டொற்றலகுபெற்றது.

என்னை.

ஆதொண்டை - ஆ - தொண்- டை - ஈரலகுஒரலகு - அளையலகு - முதலிடைப்பாடு - இருகலை - நடுவிடைப்பாடு - சாற்கலை - கடையிடைப்பாடு - மூக்காற்கலை - ஆகலின் - ஆதொண்டையீற்றைகாரக்குறுக்கங்குற்றலகேபெற்றது.

தொண்டை - தொண்- டை-ஓரலகு- அளையலகு-மூன்னிடைப்பாடு - காற்கலை - பின்னிடைப்பாடு-அரைக்கலை- ஆகலின் - தொண்டையீற்றைகாரக்குறுக்கங் குற்றலகோடொற்றலகுப்பெற்றது.

இங்ஙனம் - தொண்டை-மண்டலத்தோடுபுணருங்கால்-மண்டலம் - ஓரலகு - அளையலகு -ஓரலகு - அளையலகு - நான்கிடைப்பாடு கால் - கால்-அரை - அரை பெற்றுவேற்றிசைவிரவிநிற்றலின் புணர்ச்சியிடை - ஐங்கலையப்பெற்றுப்பிரிந்து வேறுகுறிக்கி

ன்றது - ஆகலினும் - தொண்டைமண்டலமெனல்வழு - தொண்டமண்டலமெனல்வேண்டும்.

இங்ஙனம்.

பெயர்க் கோள்கட்கு - இயற்சொற் பெயர்முதலிய-சொல்லிரிப்பெயர்முதலிய - செஞ்சொற் பெயர்முதலிய -சாதிகூற்றுப் பெயர்முதலிய - ஒருமொழிப் பெயர்முதலிய - உயர்திணைப் பெயர்முதலிய - பாற்பெயர்முதலிய - பொதுவிற்பொதுப் பெயர்முதலிய - தன்மைப் பெயர்முதலிய - வழக்குப் பெயர்முதலிய –வெளிப்படைப் பெயர்முதலிய - வாயியனடைப் பெயர்முதலிய - உயருரிமைப் பெயர்முதலிய - சிறப்புநிலைப் பெயர்முதலிய -சித்துப்பொருட்பெயர்முதலிய - இடுகுறிப் பெயர்முதலிய - மரபுநிலைப்பெயர்முதலிய - எழுத்துத் தொடர்ப்பெயர்முதலிய - பொருணிலைப் பகுபதப்பெயர்முதலிய - பெருஞ்சொல்லாட்சிப் பெயர்முதலிய - முதனூல்வாய் பாட்டுப்பெயர்முதலிய - இவைமுதற் பெயர்ப்பாகுபாடுகளினிலக்கணங்களும்.

எழுத்துப்புணர்ச்சி - பதப்புணர்ச்சி - தொடர்புபுணர்ச்சி பொருட்புணர்ச்சி - வண்ணப்புணர்ச்சி - அளபுப்புணர்ச்சி - இயைபுபுணர்ச்சி -சமநிலைப் புணர்ச்சி - கலவைப்புணர்ச்சி -தெரிநிலைப்புணர்ச்சி - குறிப்புப் புணர்ச்சி - வேற்றுமைப் புணர்ச்சி - ஒற்றுமைப்புணர்ச்சி - சிறப்புடைப் புணர்ச்சி - பொதுவுடைப் புணர்ச்சி -இருமைப்புணர்ச்சி -முதலிய புணர்ச்சியிலக்கணங்களும்.

கூர்ந்துணரார்க்குத் தொண்டமண்டலமென்பதினிலக்கணமும் புலப்படுவதன்று.

இங்ஙனமுணரமாட்டாதார்.

ஆதொண்டச்சக்ரவர்த்தியென்பவர் - தாமரசுசெய்யுங்காலத்தில் - தம்மாற்கட்டுவித்த - ஆலயங்களிற் றம்பெயரிலச் சினைநிலையின்கட்பொறிப்பித்தனர் - ஆண்டும் - ஆதொண்டவென்றே இலக்கணவமைதிபெற்றிருக்கின்றது.

இதனை - திருவலிதாயம் - திருமுல்லைவாயல் - முதலிய சிவதலங்களிற் சென்றேனுங்கண்டு தெளியக்கடவர் - இஃதின்னுங் கூறிற்பெருகும்.

தொண்டமண்டலமென்பதை.

தொண்டைமண்டலமென்று- இச்சென்னநகரிலிருக்கின்ற-வித்துவான்களிற்சிலர்மாருகவழங்க-அதுகுறித்துச்சில- பிரபுக்களும் வித்துவான்களும்- உபாத்தியாயர்களும் - இவ்விரண்டில் - இலக்கணவமைதியும் - உலகவழக்குமுள்ளது - யாது- அதனையொருவாறு தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி.

சிதம்பரம்.

இராமலிங்கபிள்ளையவர்களாற்.

தெரிவிக்கப்பட்டது.

சிவமயம்.

தொண்டமண்டலசதகம்.

வழிபடுகடவுள்வணக்கம்.

ஆசிரியவிருத்தம்.

கொண்டலே நிகர்க்கும்வேளாண் குடியொடு தழீஇய தொண்ட
மண்டலசதகந்தன்னை வளமையான் வகுப்பதற்குப்
புண்டரநுதலிரண்டு புயமிசையிருந்திரண்டு
குண்டலநிகரிரண்டு குமரனாவணக்கஞ்செய்வாம்.

கொ - ம், இச்செய்யுள், வியனுறுமெதிரதூஉம் வீ
ழாக்கொடையும், பயனுறூஉந்தொழிலும் பழியாப்பண்பும்,
வாய்மையு மறிவுமாண்புமாண்மையும், தூய்மையும் பொறையு
ந்தோவற்றமுமன்பு, முளங்கொளிரக் கமுமொழுக்கமுமுதலா, வி
ளங்குவிழுக்குடி வேளாண்குடியே.

இத்தொண்டமண்டலத்திற் பெரும்பாலு மிறைகொளப்பட்
டுத்தம்வளமையாலீண்டுறூஉ மற்றைக்குடிகட்கும் - இம்மண்டல
த்திற்கும்வளமை தோற்றிற்று - அஃது - நெறிப்பானுஞ் செறிப்
பானுந்தோன்ற - வழிபடுகடவுட்பரா அப்புலப் படுத்துவலென்
றுபுகுந்தமை யுணர்த்துகின்றதென்க.

எங்ஙனமெனின் - கொண்டலேநிகர்க்கும் வேளாண்குடியொ
டுதழீஇயதொண்ட மண்டலசதகந்தன்னை வளமையான்வகுப்பதற்
கு -குமரனாவணங்குவாமென்றதுய்த்துணர்கவென்க.

இஃது - வற்புறுத்தற்குவேளாண்குடியையளவைமுகத்தான்
வெளிப்படையின் விளங்கவைத்து மற்றைக்குடிகளை - வேற்றுரு
பொடுவிற்பராமுகத்தாற் குறிப்பின்கட்சார்த்தி வைத்ததேயமையு
மென்க.

விளங்குவிழுக்குடி வேளாண்குடி யென்றதனலன்றே - அங்
கையிற் கனிபோன்றிங்ஙனம்பெற்றும்.

அஃதீண்டெற்றூற் பெறுதுமெனின் - கொண்டலேநிகர்க்கும்
வேளாண்குடியென்றதனாற் பெறுதுமென்க.

எங்ஙனமெனின் - கொண்டலை-பருவப்புயலை-நிகர்க்கும்-ஒக்கும் - வேளாண்குடி-வெளாண்குடிப்பிறப்பினர் - எனவே - வேளாண்குடிப்பிறப்பினர் - கைம்மாறுகனவினுங் கருதலின்றிவையாது வழங்கும் - வள்ளற்றன்மையுடையாரொன்றும் - எவ்வாற்றானுயர்ந்தோர்கட்குந்தம்மையன்றி - உலகியனடத்தப்படாச் சிறப்புடைக் கருவியாந்தன்மையுடைய ரொன்றும் - இங்ஙனம் - வையகத்தார்க்கன்றிவானகத்தார்க்குங்குன்றுநன்றிகுயிற்றுநரொன்றும்-தம்மானையன்றித்தங்கருவியானுங்கருமத்தானும்- எவ்வெவ்வளாகத்தெவ்வெவ்வுயிர்கட்குமின்பந்தருமுயிலினொன்றும் - ஆன்றகல்வி - யூன்றுகேள்வி - சான்றவுணர்ச்சியென்ற ஒழுக்கமுதலிய - உயர்நெறிக்குன்றத்தும்பரிம்பர் - பல்காற்பயிலுறும் பாங்கினொன்றுந்தொன்னெறியாளர்க்குத் துணைவராகிப் பகைப்புலனடுங்கிய படர்ந்தெரிருநீ இவாய்விட்டார்த்து வாள்புடைபெயர்த்துவிற்புடைத்தழீஇப்பொற்பொடு பெய்யுமாண்மையரொன்றும் - தணணளியுருக்கொடுதாங்கிச் செங்கோனிலைபெறச்செய்யுந் தலைமையரொன்றும் - எத்திறத்தவரு மெதிர்கொடுபராஅய்ப்பற்பலதிறப்படுஉம்பரிகிற் பழிச்சவுயரிடத் தோங்கியபெயருளொன்றும் - கடவுளாணையிற்கடவாச்செறிவும் - யாவருமதிக்குமேலருடைமையும் - புலவராற்றுணையும்புகழினீட்டமும் - களக்கறுமொண்மையும் விளக்குறுபசுமையும் - பொய்யாமாற்றமும் போக்கறுதோற்றமு - மின்சுவை நிறைவு மெத்திறநலனுமுடையரொன்று முவமைக்குறிப்பாற் பெறப்படுதலின் - இங்ஙனமென்க - ஈண்டுவகுத்தவை - கொண்டலின் கண்ணுமுப்த்துணர்ந்துகொள்க- இஃதுவகுத்ததன் நிவிரிப்பிற்பெருகும்.

இனி - கொண்டலைநிகர்க்கும் வேளாண்குடி - என்பதற்கு - கொண்டல் - கொண்டலைநடாத்தும் - ஐ - தலைவனாகிய இந்திரனை- நிகர்க்கும் - ஒத்த - வேளாண்குடி - வேளாண்குடிப்பிறப்பினர் - எனினுமமையும்.

இங்ஙனம் - பெறுங்கால் - வேளாண்குடிப் பிறப்பினர் -தமது நல்லொழுக்கமென்னு மாணையாற்கொண்டலை யாங்காங்குபெய்வித்து நடத்தலும் - ஐவகைத்திணையினுமுய்வகைத் திணையாயமருதத் திணையைவளம் படுத்துக் காத்தலும் வேளாண் - வேள்விக்கு வே

ந்தரார்தலும் வீழாதுதலூஉம் வேளாண்மைக்குரிய கருவிலையு டையராதலும் - யாவரானும் விரும்பப்படுமியற்கைய ராதலுங் கொள்க - ஈண்டுவகுத்தவை இந்திரன்மாட்டுமுய்த்துணர்க - இஃ தும்விரிப்பிற்பெருகும்.

அன்றி - கொண்டலென்பதிலக்கணையாற் காவற்கடவுளாய் வி ண்டுவாகக் கொண்டக்கடவுளே யொத்த வேளாண்குடி யெனினும மைமையும் - இங்ஙனங் கொள்ளுங்கால் - வேளாண்குடிப்பிறப்பினர் - நடுநின்றெவ்வெவ்வுயிர்க்கு நுகர்ச்சிவருவித்தலும் - பகைப்புலன் முருக்கிப் பாதுகாத்தலுந் திருவிற்பொலிந்த சிறப்புடையராதலா லும் - இன்சுவையமுதமிரந்தோர்க்கீதலும் - பூமகட்குரிமை பூண் டுநிற்றலுஞ்சத்து வத்தனிக்குணத்தானே பயிறலும் - ஊக்கமுஞ் செவ்வியுமுடைய ராதலுங்கொள்க -ஈண்டுவகுத்தவை விண்டுவின் மாட்டுமுய்த்துணர்க - இஃதும் விரிப்பிற்பெருகும்.

கொண்டலெனிகர்க்கும் வேளாண்குடியென - விரியுவமையி ன்கண்ணுவமவுருபன்றியையுருபும்விரித்ததிங்ஙனம் விரிப்பதற்கு க்குறியுணர்த்தவென்க - உவமைக்கும்பொருட்கு மொருநோக்கத் தானன்றிப் பலபடவகுத்ததெற்றுலெனின் -உவமைப்பொருள்புக ழ்ப்பொருண்மிகைகுறித்தமூக் கற்றுமுரணுதற்குறியா னிகர்க்குமெ ன்னுந்தடுமாறுவமவுருபுவிரித்தமையினென்க.

என்னை - ஆசிரியர்தொல்காப்பியர் - உவமவுருபுகளைவ குத்துமுடிபுசெய்யுமிடத்து -கடப்பேயெய்ப்ப வென்னுஞ்சூத்திர த்தானிகர்ப்பவென்பது மெய்யுவமவுருபென்றுவகுத்தவண்ணமவ் வுருபீண்டஃதேலாது தொழில் - பயன்முதலியவேற்றதாகலின்.

அஃதேலிஃதியாண்டும்வராதலின்றே லெனின் - தடுமாறு றுபுகடரம்வராயின்றே யென்பவாகலின் - விரும்புமிடத்தின் றென்க - அன்றி - இஃதமூக்கற்றுமுரணுதற் பெயர்ச்சிக்கட் போந்த வெச்சம்போறலினங்ஙனங்குறிக்கவைத்ததெனினுமமையுமென்க - இவ்வுவமைநோக்கைச்சுட்டிக் கூறுவென்னுஞ் சூத்திரநோக்கத்தா னுங்காண்க - உவமையும் பொருளுமொத்தல் வேண்டுமென்ற வா றெத்தவண்ணமுய்த்துணர்க - அன்றி - உவமப்போலிமறுக்கப்ப டாவாகலினீண்டவற்றுள்ளு மேற்பனவிரும் பினுமிழுக்கின்றென்க - இஃதின்னும்விரிக்கிற்பெருகும்.

கொண்ட லென்பது.

விரவுமிகையொலிக்காப்பிய வழக்குத்தொடரியற்பால்பகா வஃறிணைப்பல்பொருள்குறித்த வொருபெயர்த்திரிசொல் - ஈண்டுச்சிறப்புப்பருரிமைக்கருவியவயவப்பொது நிலைப் பூதப்பொருட்டாகியமேகத்தையுணர்த்திற்று.

வேளாண்குடியென்பது - உயர்நிலைக்காப்பிய வழக்குச்சொன்னடைச்சிறப்புமுன்னிலைக்காரணம்பின்னிலையிடுகுறிச்சாதிக் கூற்றுத்தொடர்நிலைகருத்துப்பொருட்புறத்தியர்திணைக்காட்சிப் பொருட்பன்மைத்தோற்றத்தன்மொழித்தொகைச் சொற்றொடர் - இதனை- வேளாண்மைக்குரியகுடிப்பிறப்பினென்றுவிரித்துக்கொள்க

வேளாண்மை - நன்றி - ஈகை - வேளாண்டொழின்மை முதலியபல்பொருள்குறித்த வொருசொல் - அஃது - வேளாண்டொழிலுடைமையானன்றி - ஈகைமுதலியநற் செய்கையுடைமைக்குமுரியவோர்குடிப்பண்பாயிற்று.

குடியென்பது - குலம் - உளர்முதலியகுறித்தவோர்சொல்- அஃதீண்டு - குலத்தின்மேனின்றது - அன்றி - மருதத்திணையூரன்பதுமொன்று - வேளாண்டொழில் - என்பதில் - வேள் - என்பது - நன்னிலம் - ஆண் - என்பது - உரிமைத்தலைமை - தொழில்- என்பது - முயன்றுமுடித்தல் - இதனுல் - நன்னிலந்திருத்திச் செந்நெறிபொங்கப்பைங்கூழ்விளைக்குமுரிமைத்தலைமைத் தொழில் - என்பதுபெறப்பட்டது.

அல்லதூஉம் - வேள் - என்பது.

விரும்பப்படுகை - ஆண்டொழில் - ஆண்மைத்தொழில் - இதனுல் - அனையரால்விரும்பப்படுதலும் - மந்திரித்தலைமைசேனைத்தலைமையென்னும் - ஆண்மைத்தொழிலுடையோனென்பதூஉமமையுமென்க.

இதனையுடையகுடிப்பிறப்பினர்வேளாண்குடிப்பிறப்பினர் வேளாளனென்க - இவ்வேளாண்குடிப்பிறப்பினர் - ஈகைமுதலியநற்செய்கைகளின்மிக்கா னென்பதற்கு வேறுகூறவேண்டுவதின்று - இவர்குடிப்பெயரே தக்கசான்றென்க - அன்றி - அந்தணர் - அரையர் - வணிகர் - முதலியோர்தத்தமக்குரிய வொழுக்கங்களைநடத்தற்கு வேளாண்குடிப்பிறப்பினரது - உதவிமுற்றும்வேண்டுதலின்,

•இவர்நெறிபெருநெறி யென்பதற்குமஃதேசான்றென்க.

இதனை - தொல்காப்பியத்தில் - நாற்றமுமென்னுஞ்சூத்திரத் துள் - வேளாண்பெருநெறியென்றதனுற்காண்க அன்றியிவர்க்கித் தொழிலுரிமைச்சிறப்பென்பதூஉம் - இவரதுமேம்பாட்டுத் தன் மையையுமரபியலிற்காண்க - இதனைவிரிக்கிற்பெருகும்.

சதகம்.

கட்டளைக்கலித்துறை.

சீர்கொண்டகச்சித் திருவேகம்பத்தரன் செல்வமுக்கட்.....*
கார்கொண்டமும்மதத் தைங்கரத்தாங்கிக்கடவிகடப் ... ... *
பேர்கொண்டசக்கரப் பிள்ளையைத்தான்பெற்ற பேறதனுல் ... *
வார்கொண்டகீர்த்தி படைத்ததன்மேரு தொண்டமண்டலமே (க)

மேற்கோள் - ஸ்காந்தம். கலிவிருத்தம்.

நிகடசக்கரச் செம்முகமைந்துளான் ... . *
சகடசக்கரத் தாமரைநாயக ... ... *
னகடசக்கர வின்மணியாவுறை ... . *
விகடசக்கரன் மெய்ப்பதம்போற்றுவாம் .. ... *
சேவடிசெய்வ தறியாதமாவலி முன்புசென்று ... ... *
மூவடிவேண்டுந் திருமான்மருகனிம் மூவுலகுங் ... .. *
காவடியாக வொருதலைமேவிய காஞ்சிபுர ... .. *
மாவடிமேவும்பெருமான்பதி தொண்டமண்டலமே .. (உ)

(மே - ள் -)ஸ்காந்தம். ஆசிரியவிருத்தம்.

மூவிருமூசங்கள்போற்றி முகம்பொழிகருணைபோற்றி ... *
யாவருந்துதிக்கநின்ற விராறுதோள்போற்றிகாஞ்சி .. ... *
மாவடிவைகுஞ்செவ்வேண் மலரடிபோற்றி யன்னுன் .. .. *
சேவலுமயிலும்போற்றி திருக்கைவேல்போற்றிபோற்றி ... *
கயிலையுங்கச்சியும்விற்கோலமுதற் கழுக்குன்றமும் .....*
பயில்வலிதாயமும் பாருருமச்சிறுபாக்கமுதல் ... .. *
லயிலையும்வல்லந்திருவொற்றியூருமரசிலியு ... ... *
மயிலையுமீசன்மகிழ்ந்ததன்மேரு தொண்டமண்டலமே ... (ஊ)

(மே - ள்)கட்டளைக்கலித்துறை.

ஈரஞ்சுட்டிரண்டுமலைநாட்டிலொன்று கொங்கேழுவையை ... *
வாரஞ்சுரேழ்நடு நாட்டெழுமூன்றென் றைந்தாம்வடக்கிற் ... *

சோணாட்டொருநூற்றுத்தொண்ணூறென்றோர்வர்தொலுவத்தொன்
று, நாணாட்டியதொண்டநன்னாட்டிலாறைந்திருநகரோ ... ... *

திருப்பதிக்கோவை-ஆசிரியவிருத்தம்.

தண்ணார்தண்டலைப்பாதிரிப்புலியூர்முண்டீச் ... .. *
சரம்புறவார்பனங்காட்டூர்திருவர்மாத்தூரோ ... ... *
யெண்ணரண்ணுமலையுநடுநாட்டிலிருபத் ... ... *
திரண்டாகுமிப்பாலேகம்பமேற்றளிவின் ... ... *
கண்மேனுங்குமதிலோணகாந்தன்றளியனேக .. ... *
தங்காவதங்கச்சிநெறிக்காளைக்காடே ... ... *
யுண்ணாடுகுரங்கணிமுட்டந்திருமாகறலோத் ... .. *
தூர்வன்பார்த்தான்பனங்காட்டூர்வல்லமாற்பேறே ... ... *

இதுவுமது.

ஊறலிலம்பையங்கோட்டூர்விற்கோலமாலங்கா .. ... *
டுயர்பாசூர்வெண்பாக்கங்கள்ளில்காளத்தி ... ... *
மாறிறிருவொற்றியூர்வலிதாயம்பாலி ... ... *
வடமூலவாயில்வேற்காடுதிருமயிலை .. .. *
யீறிறிருவான்மியூர்கச்சூரால்க்கோயி .. ... *
லிடைச்சுரங்கழுக்குன்றமச்சிறுபாக்கம்மே .. ... *
மாறிறிருவக்கரையேயரசிலிதொல்லிரும்பை ... ... *
மாகாளந்தொண்டநன்னாட்டெண்ணின்மூப்பானிரண்டே *

இளைத்தெழுவெண்பிறையார்கச்சியேகம்பரின்னருளால்... *
விளைத்தெழுநாலிலொருமருந்தாலும்விலக்கரிதாய் ... *
முளைத்தெழும்பொற்சிகரம்போலுமம்மைமுலைத்தழும்பும்... *
வளைத்தழும்பும்பெற்றிருப்பதன்றோதொண்டமண்டலமே ...(ச)

(மே - ள்)காஞ்சிபுரத்தின்பழையபுராணம்- ஆசிரியவிருத்தம்.

மங்கைநாயகிதன்வரிவளைத்தழும்பும்வளரிளமுலைசெய் தசுவடு
ம், கொங்கைநாயகமுங்கண்டுகண்டுள்ளக்குறிப்புடனல்குவாய்கொ
வே, சிங்கநாயகமாயிருந்தநாரணஞ்சிம்புளாயடர்த்த சேவகனே,
கங்கைநாயகனே கம்பனேகச்சிக்கடவுளேகாக்குநாயகனே ... *

சேணார்கழுகுபழகுதெய்வீகச்சிறப்புமன்றி .. ...*
யேணரும்பூதங்கொடுபோவதுமன்றியெண்ணிறைல்சீர்க் *

காஞ்துகாண்பதுகச்சியிலேயென்றுகாகினியோர் ... *
வாஞ்ளளவுந்துதிப்பதன்றேதொண்டமண்டலமே ...(டு)

(மே - ள்) திருவாசகம்.

பிட்டுநேர்படமணக்குமந்தபெருந்துறைப்பெரும்பித்தனே *
சட்டநேர்படவந்திலாதசழக்கனேனுனேச்சார்ந்திலேன் .. *
சிட்டனேசிவலோகனேசிறுநாயினுங்கடையாயவெங்... ... *
கட்டனேனையுமாட்கொள்வான்வந்து காட்டினுய்கழுக்குன்றிலே *
நீடார்துளபமணநாறுகச்சியினீலமொன்றுங்... ... *
கோடாவிளக்கொடுசேர்நீலமொன்றுங்குல்வுபுக .. .. *
மேடார்சுனையின்மலர்நீலமொன்றுமற்றெப்பொழுதும்... *
வாடாமற்காட்டவும்வல்லதன்றேதொண்டமண்டலமே ...(சு)

(மே - ள்)நேரிசைவெண்பா

நீலமழைமுகிலோநீலமணிக்குன்றமோ ... .. *
கோலநிறைந்தகுளிகடலோ—சோலையிளங் ... ... *
காயாவனமோகழுநீர்கண்ணமங்கை ... .. *
மாயாவுனதுவடிவம் ... ... *

காஞ்சீபுரத்தின்பழையபுராணம்

எந்நாளுமொருசுனையிலிந்திரநீலப்போதுமலர்ந்தேதோன்றும்
பூதவஞ்சூதமுதலாகநின்றபொதும்பிற்சந்த ... ... *
பாதவம்போன்மிக்கவேளாளர்தங்கியபான்மையினு... ... *
லாதவஞ்சூழ்தருபல்கோடிதேசமனத்தினுமா ... ... *
மாதவஞ்செய்ததன்றேதமிழ்சேர்தொண்டமண்டலமே ... (எ)

(மே - ள்)பஃறொடைவெண்பா.

வையகமெல்லாங்கழனியாவையகத்துச் ... ...*
செய்யகமேநாற்றிசையுட்டேயங்கள்செய்யகத்து ... *
வான்கரும்பேதொண்டவளநாடுவான்கரும்பின் ... ... *
சாறேயந்நாட்டுத்தலையூர்கள்சாறட்ட ... ... *
கட்டியேகச்சிப்புறமெல்லாங்கட்டியுட் ... ... *
டானேற்றமான சருக்கைமாமணியே ... .. *
யானேற்றுன்கச்சியகம் ... . *
இன்னும்புகழ்நிற்கவோர்பழிக்காமற்றெழுபதின்மர் .. *
துன்னுந்தழல்புக்கொளித்ததெல்லாஞ்சுருதிப்பொருளா ... *

யுன்னும்புரிசைத்திருவாலங்காட்டினுளைபதிக ... ... *
மன்னுந்தமிழில்வகுத்ததன்றேதொண்டமண்டலமே (அ)

(மே - ள்)திருக்கடைக்காப்பு.

தஞ்சவருவாருந்தொழுவிப்பாரும்வழுவிப்போய் ... *
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாருமுனைநட்பாய் ... *
வஞ்சம்படித்தொருத்திவாணுள்கொள்ளும்வகைகேட் ... *
டஞ்சும்பழையனூராலங்காட்டெம்மடிகளே ... ... *

கண்ணுர்கருணைக்கடற்றொண்டமான்கைக்கடாசலத்தைத் .. *
தண்ணுருமூல்லைக் கொடிதடித்தாட்கொண்டதன்மையெல்லாம் *
பண்ணுருஞ்செஞ்சொற்றிருமூல்லைவாயிற்பதிகஞ்சொல்ல .. *
மண்ணுழிகாலமுநிற்பதன்றேதொண்டமண்டலமே .. (கூ)

(மே - ள்)திருப்பாட்டு.

சொல்லரும்புகழான்றொண்டமான்களிற்றைச்சூழ்கொடிமூல்லையா
ற்கட்டிட்,டெல்லையிலின்பமவன்பெற வெளிப்பட்டருளியவிறைவ
னேயென்று,நல்லவர்பரவுந்திருமூல்லை வாயினுதனே நாவிடை
யேறி, நல்கலப்பொருளேபடுதுயர்களையாய் பாசுபதாபரஞ்
சுடரே .. .. *

இரட்டைப்புலவர்கள்பாடிய - ஏகாம்பரநாதருலா.

மூல்லைக்கொடிதடித்தமூதூரும். ... ... *
நன்கண்ணமயாகவயாவுற்றநோய்கண்டுநாடரிய... ...*
புன்கண்மைநோக்கியுஞ்சற்றுமெண்ணுதொர்புலவனுக்காத் ... *
தன்கண்மைசூலிமுதுகினிற்சோதிட்டதன்மையினுல் ... .. *
வன்கண்மைசெய்யவும்வல்லதன்றேதொண்டமண்டலமே (ஙு)

(மே - ள்)இரட்டையாசிரியவிருத்தம்-மடக்கு.

பன்றிகோடுழுதநந்திவெற்பனிருபாரவெற்பினையடக்கிலான்,
பாணன்வெம்பிணமெடுத்தவன்கொடியபாணன்வெம்பிணமெடுக்
கிலான், சென்றுநென்மூலையைவாரிஞென் புதியதிங்கள்வெண்மு
லையைவாரிலான்,செட்டிதன்பழிநவிர்த்தவன்பரிவு செய்துபெண்
பழிதவிர்க்கிலான், அன்றுசூலிமுதுகன்னமிட்டவனெனன்னை கூன்
முதுகளிக்கிலான், அங்கையாடரவின்வாயிலிட்டவனை னல்குலாட
ரவுதீண்லான், வென்றிமேவுதொடையாடைதினவனேமியாடை

யதுகீறிலான், வீறுலாவுதமிழாறைமேவுபர மேஸ்வரன்புதல்வ
னெல்லனே ... . *

வீரூரிசையுரசையும்வல்லோரிந்தமேன்மைசற்றுந் ...*
தேரூதபோதுசெப்புவரால்வரைத்திண்புயத்தே... ... *
பேரூனபாணன்பிணஞ்சுமந்தேவரும்பெற்றிகொண்டே ...*
மாரூதகீர்த்திபடைத்ததன்றேதொண்டமண்டலமே ... (ஐந)

(மே - ள்)பாணன்வெம்பிணமெடுத்தவன்.

இதனைமேற்காட்டியபன்றிகோடூதவென்னும்பாடலிற்காண்க

கொங்கலர்மாலையுங்கல்லாய்விடுமன்புகொண்டெறிந்தா... *
லிங்கலராய்விடுங்கல்லானதுமென்பதின்றறிந்தோஞ் .....*
செங்கலினெறிந்தசிவனுர்பதஞ்சேர்வர்சங்க ... ..
மங்கையின்மேவியசாக்கியனுர்தொண்டமண்டலமே ... ... (ஐஉ)

(மே - ள்)திருத்தொண்டத்தொகை. *

மறவாதகல்லெறிந்தசாக்கியர்க்குமடியேன் ... ...*

புராணசாரம் - ஆசிரியவிருத்தம்.

சங்கமங்கைவருவேளாண்டலைவர்காஞ்சிச் ... ... *
சாக்கியமோடியைந்தவர்தந்தவறுஞ்சைவத் ... ... *
துங்கமலிபொருளுமூணர்ந்தந்தவேடந் ... ... *
துறவாதசிவலிங்கந்தாழுவோர்கண்டோ ... ... *
ரங்கமலர்திருமேனியழுந்தச்சாத்தி .. ...*
யமருநாண்மறந்தொருநாளருந்தாதோடிச் .. ... *
செங்கலெறிந்திடுமளவின்மகிழ்ந்தநாதன் ... ... *
திருவருளாலமருலகஞ்சேர்ந்தளாரே ... ... *

தெள்ளத்தெளிந்தவர்செய் தக்கதோர்முறைசெய்யிலையா... *
வெள்ளத்தனமலையத்தனையாமென்பதின்றறிந்தோ ... *
முள்ளற்கரியதொடையாடைகீறியதொன்றுமொரு ... *
வள்ளற்றகைமையொடொத்தளதாற்றொண்டமண்டலமே (ஐஊ)

(மே - ள்)வென்றிமேவுதொடையாடைகீறினவன் ... *

இதனையும் - மேற்காட்டிய.பன்றிகோடூதவென்னும் பாடலிற் [காண்க.

தாயினுநல்லதையுடையோர்கடமதுடலம் .. ...*
வீயினுஞ்செய்கைவிடுவர்கொல்லோதங்கண்மெய்ம்மூழுதுந் .. *

தீயினும்வீழ்வர்முதுகினுஞ்சோறிட்டுச்சீறரவின் ... ... *
வாயினுங்கையிடுவாரவர்காண்டொண்டமண்டலமே ... (ஐச)

(மே - ள்)விருத்தம்.

தூளியிட்டமுள்ளெயிற்றரவின்வாய்முழையிற்... ...*
றுறுத்திட்டவநசத்தினுல் ... ... *

விருத்தம்.

மாறெசெயுமரவின்வாய்தீண்டவும்பயந்து ... .. *
பேறெமணியுதவப்பெற்றகுலமென்னும ... .. *
ஈறெபரத்தையர்களுன்வாயில்வைத்தகுறி ... ... *
யாறென்களந்தையழகப்பெருமாளே ... ... *
மீனவர்நாட்டினுஞ்செம்பியர்நாட்டினும்வில்லவர்கோ ...*
னைவனுட்டினுமிக்கதென்பார்களதிசயமோ ... ... *
கோனவனுட்டிம்மூளையமுதாகிற்குலவமுதார் .. *
வானவர்நாட்டினுமிக்கதன்றேதொண்டமண்டலமே .. (ஐஞ)

(மே - ள்) புராணசாரம். ஆசிரியவிருத்தம்.

மன்னியவேளாண்டொன்மையிளசைமாறர் ... ... *
வறுமையாலுணவுமிகமறத்துவைகி ... ... *
யுன்னருநள்ளிருண்மழையினண்டிவேண்டி ... ... *
யும்பர்பிரானணையவயலுழுதுவித்துஞ் ... ... *
செந்தெனன்மூளையமுதனையகாலாக்கிச் ... ... *
சிறுபயிரின்கதியமுதுதிருந்தச்செய்து .. ... *
பன்னலருமுணவருந்தற்கெழுந்தசோதிப் .. ... *
பரமோகமுழுதாண்டபான்மையாரோ ... ... *
சாய்த்திட்டவர்க்குத்திருமேனிமுன்கையைச்சந்தனமாத்... *
தேய்த்திட்டவர்க்கெவர்நேரென்பரால்நஞ்செந்தழலிற் .. *
றோய்த்திட்டவருக்குச்சர்வாங்கமுந்திரிதூள்படவே .... *
மாய்த்திட்டவர்க்கரிதோவெளிதோதொண்டமண்டலமே ...(ஐசு)

(மே - ள்)சேக்கிழார்புராணம் - ஆசிரியவிருத்தம்.

மாறுகொடுபழையனூர் நீலிசெய்தவஞ்சனையால் வணிகனு
யிரிழப்பத்தாங்கள், கூறியசொற்பிழையாது தணிந்துசெந்தீக்கு
ழியிலெழுபதுபேருமூழ்கிக்கங்கை, யாறணிசெஞ்சடைத்திருவால
ங்காட்டப்பண்டமுறநிமிர்ந்தாடுமடியின்கீழ்மெய்ப், பேறுபெறு

ம்வேளாளர்பெருமையெம்மாற்பிதித்தளவிட்டிவளவெனப் பேச
[லாமோ.

கேட்டாலுமின்பங்கிடைக்குங்கண்டீர்கொண்டகீர்த்தியொடு *
பாட்டாலுயர்ந்தபுகழேந்திசொன்னபடியறிந்து ... .. *
பூட்டார்சிலைமன்னன்வையம்பெறினும்பொய்தானுரைக்க ... *
மாட்டானெனச்சொன்னநாட்டார்திகழ்தொண்டமண்டலமே (ஐஎ)

(மே - ள்) ஆசிரியவிருத்தம்.

வையம்பெறினும்பொய்யுரைக்கமாட்டார் தொண்டநாட்
டாரென், றையன்களந்தைப்புகழேந்தியாண்டாருரைக்குமவரோநீ,
செய்யுஞ்சிலேக்கைமதவேளேயெழுபார்புரக்குமெங்கோவே, யைய
ந்தவிர்த்தபெருமானேயாவோமடியோமாவோமே. ... ... *

கையாரிரண்டுடைக்காளைதன்வாயிற்கவிதைகொண்ட .... *
பொய்யாமொழிக்கும்புகலிடமானதுபொய்கையெல்லாஞ் ... *
செய்யார்கமலமலரவண்டானங்கள்சென்றுதிசழ் ... ... *
மையார்குவளைவயல்புடைசூழ்தொண்டமண்டலமே ... (ஐஅ)

பொன்பூரணம் (மே - ள்) நேரிசைவெண்பா.

விழுந்தகுளியந்தரத்தேவேமென்றும்வீழ்ந்தா ... ... *
லெழுந்துசுடர்சுடுமென்றேங்கிச் - செழுங்கொண்டல் ... *
பெய்யாதகானகத்தேபெய்வளையும்போயினளே ... *
பொய்யாமொழிபகைஞர்போல் ... ... *

விண்ணிற்பிறக்கும்புகழ்க்குன்றநாடன்விளங்குதமிழ்ப் ... *
பண்ணிற்பிறக்கும்பெரியபுராணம்பகர்ந்தபிரா ... *
ணெண்ணிற்பிறக்கும்பதனூலியென்றலியெய்தவந்த .. *
மண்ணிற்பிறக்கவும்வைக்குங்கொலோதொண்டமண்டலமே (ஐசு)

மே - ள்) சேக்கிழார்புராணம்-ஆசிரியவிருத்தம்.

சேக்கிழானமதுதொண்டர்சீர்பரவநாமகிழ்ந்துலகமென்றுதம்
வாக்கினலடியெடுத்துரைத்திடவரைந்துநூல்செய்தமுழுதத்தனன்,
காக்கும்வேல்வளவநீயிதைக்கடிதுகேளெனக்கனகவெளியிலே ...
யூக்கமானதிருவாக்கெழுந்ததுதிருச்சிலம்பொலியுமுடனெழ ...*

நேரிசைவெண்பா.

கொண்டறவிழ்த்தண்டலைசூழ்குன்றநகர்ச்சேக்கிழா... ...*
கொண்டரணியோருய்யவோதினர் - தண்டலில்சீ ... *

தோன்றபுகழ்நாலாயிரத்திருநூற்றெண்பத்து ... ... *
மூன்றுதிருவிருத்தமும். ... ... *
தேமாம்பொழிதிகழ்சம்பந்தர்வாழுஞ்சிரபுரம்போற்... *
ருமாதவஞ்செய்ததெத்தனையோதென்றமிழியல்சேர் ... *
பாமாலைசூடமதுரநல்வாயிற்பதியுடனே ... . *
மாமாசிலாமணிச்சம்பந்தன்வாழ்தொண்டமண்டலமே (உசு)

(மே - ள்) கட்டளைக்கலித்துறை.

பொருமாகடலிடைத்தோன்றலல்லாதுபுணரிவெள்ளந் ... *
தருமாமணியொன்று கண்டதுண்டோவையந்தந்தவனுந் ... *
திருமாலும்போற்றுந்தென்னூரிற்சம்பந்ததேசிகனு ... *
மொருமாசிலாமணிபோன்பவாரியுதவியதே ... *
பொய்யகமாகியமாயாப்பிரபஞ்சம்போக்குதற்குக். . .. *
கையகதெல்லிக்கனியதன்றேகச்சியேபெரிதாய்... ... ... *
மெய்யகமேபுரிகாரிகைப்பாட்டில்விளங்கவைத்த ... ... *
வையகமென்னுந்தமிழ்புனைதொண்டமண்டலமே.... ... (உக)

வையகமெல்லாங்கழனியாவையகத்துச் ... ...
செய்யகமேநாற்றிசையுட்டேயங்கள் - செய்யகத்து... ... ... *
வான்கரும்பேதொண்டவளநாடு... ... ... *

இப்பாடலையேழாவது பாட்டின்மேற்கோளிற்காண்க.

அஞ்சொன்முதுதமிழ்நால்வேந்தர்வைகுமவையிலளவை... *
செஞ்சொற்புனைகின்றவேளாளர்வைகுஞ்சிறப்புடைத்தால்... ... *
விஞ்சியவேழமுடைத்தென்னும்பாடல்விளம்பிப்பின்னும் ... *
வஞ்சிவெளியவெனும்பாமொழிதொண்டமண்டலமே... (உஉ)

(மே - ள்) நேரிசைவெண்பா.

வேழமுடைத்துமலைநாடுமேதக்க... ... ... *
சோழவளநாடுசோறுடைத்து - பூழியர்கோன் ... ... *
றென்னாடுமுத்துடைத்துதெண்ணீர்வயற்றொண்ட .. ... *
நன்னாடுசான்றோருடைத்து ... ... *

இன்னிசைவெண்பா.

வஞ்சிவெளியருகுகெல்லாம்பஞ்சவன்ற... ... ... *
னன்மாடக்கூடலிற்கல்வலிது ... ... *

சோழனுறைந்தைக்கரும்பினிதுதொண்டமான் ... ...*
கச்சியிற்காக்கைகரிது ... ... *
* படவேங்கடற்கடலன்னதொல்காப்பியப்பாயிரஞ்சொல் ..*
லிடவேங்கடலின்றியேபனம்பாரர்மற்றெல்லிசொல்லக் ... *
கடவேங்கடலன்னசெந்தமிழ்க்கேயென்றுகாட்டுதற்கு ... *
வடவேங்கடந்தென்குமரியென்றார்தொண்டமண்டலமே* (உரு)

(மே - ள்) தொல்காப்பியச்சிறப்புப்பாயிரம்.

வடவேங்கடந்தென்குமரி .. .. *
யாயிடைத் ... ... *
தமிழ்கூறுநல்லுலகத்து ... ... *
வழக்குஞ்செய்யுளுமாயிருமுதலி .. *
னெழுத்துஞ்சொல்லும்பொருளுநாடிச் ... .. *
செந்தமிழியற்கைசிவணியநிலத்தொடு ... ... *
மூன்றுநூல்கண்டுமுறைப்படவெண்ணிப் ... *
புலந்தொகுத்தோனேபோக்கறுபனுவ ... .. *
னிலந்தருதிருவிற்பாண்டியனவையத் ... ... *
தறங்கனாவினுன்மறைமுற்றிய ... ... *
வதங்கோட்டாசாற்கிறபத்தெரித்து .. ... *
மயங்காமரபினெழுத்துமுறைகாட்டி ... ... *
மல்குநீர்வரைப்பினந்திரநிறைந்த .. ... *
தொல்காப்பியனெனத்தன்பெயர்தோற்றிப் ... *
பல்புகழ்நிறுத்தபடிமையோனே ... *
இடஞ்சூழுங்காரிகையாப்பிற்குதாரணமென்றுகொண்டு *
விடஞ்சூழவென்றெழுவாயிற்றொற்றிவெறிகமழ்வேங் ... *
கடஞ்சூழ்கரடக்கடாக்களிற்றுணியற்காளிம்பன்மேல் ... *
வடஞ்சூழெனச்சொன்னபாமாலையுந்தொண்டமண்டலமே (உச)

(மே - ள்) ஆசிரியவிருத்தம்.

விடஞ்சூழரவினிடைநுடங்கவில்வாள்வீசிவினையாரீமேவுங் *
கடஞ்சூழ்தாடன்காளிம்பன்கத்திர்வேல்பாடுமாதங்கி ... *
வடஞ்சூழ்கொங்கைமலைதாந்தாம்வடிக்கணிலமலர்தாந்தாந் *
தடந்தொளிரண்டும்வேய்தாந்தாமென்னுந்தன்னைத்தண்ணுமை
யே

படையிற்கொடையிற்பெரியோனையக்கணம்பாடக்கம்பற் *
கடையக்கொடுத்திடவாங்கினனுலருமந்தமுத்தைக் .. *
கடையிற்கடையிருப்பிற்குமாறக்களகளென ... *
மடையிற்றரளஞ்சொரிவயல்சூழ்தொண்டமண்டலமே ...(உடு)

(மே - ள்) வெண்பா.

*க்கவிடைதழுவிக்கோடுழுதபுண்களெல்லாந் *
திக்கிலுயர்காளிம்பன்றென்பழன்மா—னக்கணமே *
தோள்வேதுகொண்டிலனேற்சுந்தரப்பொற்றேரன்றலுக்கு ... *
வாழ்வேதுகண்டிலேன்மற்று ... ... *

இளப்பார்இளப்பவடிமடக்காகக்கெழுமியசொல் ... *
லளப்பாமதுரத்துடன்பூக்கமலமென்றுய்ந்தெடுத்த ... *
களப்பாளனெற்குன்றவாணன்தாதிக்கலித்துறையே ... *
வளப்பார்புகழைவளர்ப்பிக்குமாற்றொண்டமண்டலமே (உசு)

(மே - ள்) திருப்புகலூரந்தாதி.

கட்டளைக்கலித்துறை.

பூக்கமலத்துவிழிவளர்வானென்றும்போற்றியவூர் ...*
மார்க்கமலத்துமகிழ்கின்றவூர்மதுவாணிறைந்த ... ... *
தேக்கமலத்துவழியேபரக்குந்திருப்புகலூர் .. ..*
நோக்கமலத்துயர்சோதிநெஞ்சேநமைநோக்குதற்கே ... *

இதுவுமது.

வளப்பாடிலாதவெருக்குமிதழிமலருமன்ப ... *
ருளப்பாடுறைபுகலூரருக்காதலினேதிமிக்கோர் ... .. *
தளப்பாடிதுதமிழ்க்கென்னினுஞ்சாற்றவன்சந்திரன்சொற் *
களப்பாளனெற்குன்றைவாணனந்தாதிக்கலித்துறையே ... *
போனத்தினுலோர்புறவினேற்றவன்போலவுமோ ...*
ரோனத்தினுலெதிரேற்றவன்போலவுமேன்றுகொண்ட ... *
மீனத்தினுன்மற்றிருகோடிசெம்பொன்விலைகொடுத்த ... *
மானத்தினுமுவியதன்றேரதொண்டமண்டலமே (உஎ)

கூட்டுங்கரந்தங்கொழுநர்க்கல்லாமற்கொடிவெருவ ... *
வோட்டும்பொழுதுங்கரங்குவியாரமுதூட்டுதற்கு ... *
மூட்டுந்தழற்கொருமுன்றினில்லார்கற்புமூட்டியெரி ... *
மாட்டுந்திறமனேதறமுண்டேதொண்டமண்டலமே ...(உஅ

பின்போர்தமைக்கண்டுபாவித்ததோவன்றிப்பின்புவந்தோர்
தன்போனடக்கப்பணிப்பித்ததோதமிழ்க்கேயிரங்கி ... *
முன்போம்புலவற்குப்பின்போயினுமுகுந்தனிது ... *
வன்போமனத்தினிலன்போசொல்வீர்தொண்டமண்டலமே (உசு)

(மே - ள்) நேரிசைவெண்பா.

கணிகண்ணன்செல்கென்றுன்காமருபூங்கச்சி ... *
மணிவண்ணநீகிடக்கவேண்டா—துணிவுடைய ... ... *
செந்நாப்புலவனுஞ்செல்கின்றேனீயுநின் ... .. *
பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள் ... ... *

இதுவுமது.

முன்போம்புலவற்குமுதறிவாற்பாய்சுருட்டிப் ... *
பின்போஞ்சவரிப்பெருமாளே—யன்பாகப் ... *
பேய்முலைப்பாலுண்டவனேபேதையேனின்னமொரு ... *
தாய்முலைப்பாலுண்ணுமற்று ... ... *

சென்னியிற்சென்றதுகிலோடுசென்றுகிலரிழிந்தார் ... *
பன்னியிற்சென்றதுபோலிழிந்தார்சிலர்பாங்குடனே ... *
பொன்னியிற்சென்றுகையேறினுரைப்புணர்ந்ததன்று ... *
வன்னியிற்சென்றுகையேறினுர்தொண்டமண்டலமே ... (கூ)

பொள்ளாறுழைவழிபோய்த்தலைநீட்டும்புலவன்முன்னுள் *
கள்ளாறுசெஞ்சொற்கலம்பகமேகொண்டுகாயம்விட்ட ... *
தெள்ளாறைநந்தியெனுந்தொண்டமான்கலிதீர்ப்பதற்கு ... *
வள்வார்முரசமதிர்த்தாண்டதுந்தொண்டமண்டலமே ... (கூக)

(மே - ள்) விருத்தம்.

துயிலுணர்ந்துவெட்டுமெங்கள்தொண்டவேந்தே.

நந்திக்கலம்பகம் - ஆசிரியவிருத்தம்.

வானுறுமதியையடைந்ததுன்வதனம்வையகமடைந்ததுன்கீர்த்தி, கானுறுபுலியையடைந்ததுன்வீரங்கற்பகமடைந்ததுன்கரங்க, டேனுறுமலராளரியிடஞ்சேர்ந்தாள்செந்தழல்புகுந்ததுன்மேனி, யானுமென்கலியுமெவ்விடம்புகுவேமெந்தையேநந்திநாயகனே. ... ... *

நீளத்திரிந்தென்றுவெண்பாவினுலன்றுநின்றையர்சோன் *
காளத்திவாணனப்பாடியபாடல் கருதுமண்ட .. *

கோளத்தினுஞ்சென்றுபாதாளம்புக்குக்குலவுசக்ர ... *
வாளத்தினுஞ்சென்றதாலெளிதோதொண்டமண்டலமே (கூஉ)

(மே - ள்) நேரிசைவெண்பா.

நீளத்திரிந்துழன்றுய்நீங்காநிழற்போலு ... *
நாளைக்கிருத்தியோநல்குரவே - காளத்தி .. ... *
நின்றைக்கேசென்றக்கானியெங்கேநானெங்கே ... *
யென்றைக்குக்காண்பேனினி ... .. *

பாகொன்றுசொல்லியைப்பார்த்தமையாலன்றுபாண்டியன்
மூனுகின்றசிற்றிடைவேழம்பக்கூத்திநொடிவாயிற் .. *
சாகின்றபோதுதமிழ்சேரயன்றைச்சடையன்றன்மேன் .. *
மாகுன்றெனச்சொன்னபாமாலையுந்தொண்டமண்டலமே (கூக)

(மே - ள்) கட்டளைக்கலித்துறை.

மாகுன்றனபொற்றிருளான்வழுதிமன்வான்கரும்பின் ... *
பாகொன்றுசொல்லியைப்பார்த்தெனப்பார்க்கிலன்பையப்பைய*
ப்,போகின்றபுள்ளினங்காள்புழற்கோட்டம்புகுதுவிரேற் ... *
சாகின்றனளென்றுசொல்வீரயன்றைச்சடையனுக்கே ... *

ஆசிரியப்பா.

இரவலாளரேபெருந்திருவுறுக *
வரவுமிழ்மணியுமலைகடலமிர்தம் *
நிங்கட்குழவியுஞ்சிங்கப்பாலுங் *
குதிரைமருப்புமுதிரைவாலு *
மீதெனமொழியினுமில்லெனமொழியான் *
சடையனையயன்றைத்தலைவனீர்போ
யுடையதுகேளுமுறுதியுள்ளோரோ ... *
சொல்லையிலாகச்சொரிகவிமாரிசுரிதிவல்லான் ... ...
செல்லையில்சோலைக்குறுங்குடிவாழ்நம்பிசென்றுகண்ட ... *
வெல்லையினீடுங்கரடக்கடாக்களிறென்றுசொன்ன... *
வல்லையிற்காளத்திவாழ்வானதுதொண்டமண்டலமே ... (கூச)

(மே - ள்) கட்டளைக்கலித்துறை.

பொரடக்கயம்பிடியென்றுன்மதனனிப்பூவையுமா .. *
தரடக்கமுஞ்சற்றறிந்திலளேதனைத்தான்பணியா ... *

மூரட்க்கவுடக்கெடிமண்டலிகர்முடிபிடுங்கு ..
கரடக்கடாக்களிற்றுய்வல்லைமாநகர்க்காளத்தியே...
நூலார்கலைவல்லசெம்பியன்கேட்கநொடித்துமிக்க...
கோலாகலனெட்டக்கூத்தனையன்றுதற்கோலியென்று ..
மேலார்கவிசொல்லிநெய்த்தானத்தேசென்றுவென்றுகொண்ட...
மாலார்களந்தைப்புகழேந்தியுந்தொண்டமண்டலமே ... (நூடு)

(மே - ள்) ஆசிரியவிருத்தம்.

தற்கோலிப்பூசற்பாசத்தேதப்பாமற்சாகைக்கேநிற்பீர்...
முற்கோலிக்கோலிப்பூசித்தேமுட்டாமற்சேவித்தேநிற்பீர் ...
வற்றுநெட்டோடைப்பாரச்சேன்மைப்பூகத்தேநித்தாவிப்போய்
நெற்றுரூற்றுலப்பாகிற்சேர்நெய்த்தானத்தானைச்சேவித்தே ...

இதுவுமது.

விக்காவுக்கா வித்தாவித்தா விப்போய்விட்டார்நட்டார்சுட்டீர்
க்புகாரிக்காயத்தாற்சப்பாடுற்றேடிப்போய்வைப்பீர்நிற்பீ...
ரக்காடப்பேய்தொக்காடச்சூழப்பாடத்தீவெப்பாடப்பூ ...
ணைக்காடக்கானத்தாடப்போநெய்த்தானத்தானைத்தியானித்தே
ளரினியற்றுங்களைக்கோட்டையீந்தன்னமிட்டுநல்ல ...
பாரிபறித்தென்னும்பாடல்கொண்டோன்பண்புசேர்பழைய
னூரிலிருப்பவனெளவைதன்பாடற்குவந்தபிரான் ...
மாரியெனத்தருகைக்காரியுந்தொண்டமண்டலமே (நூசு)

(மே - ள்) வெண்பா.

பாரிபறித்தபறியும்பழையனூர்க் ...
காரிகொடித்தகளைக்கோடுஞ்—சேரமான்...
வாராயெனவழைத்தவாய்மையுமும்மூன்று .. ..
நீலிச்சிற்றுடைக்குநேர் ....

விழுவேனெனச்சென்றுவீழ்ந்தாரிலோர்மைந்தன்வேறுபட
வுழுவேலியிற்சென்றெருநீலிமுன்கையுடையவற்குக் ..
கொழுவேபடைக்கலமென்றுசொல்லாமுனங்கூறியசொல்...
வழுவேயெனப்பொன்றுவல்லாளனுந்தொண்டமண்டலமே (நூஎ)

(மே - ள்) பழைமொழி.

முன்கையுடைபார்க்குக்கொழுவேபடைக்கலம்...

வீரூர்நெருப்பிடைவீழ்த்தவும்பாடிமூன்வீழ்த்ததற்பி ... ... *
லூருநெருப்பினையாறவும்பாடியடியவலாச் .. ... *
சீருதெய்வத்திருஞானசம்பந்தர்செய்ததமிழ் ... .. *
மாருதிற்கப்படைத்ததென்பார்தொண்டமண்டலமே... (ஙஅ)

வத்தளித்தாயிரம்பாடல்கொண்டேநிணாமீந்தெருமைப்... *
போத்தளித்தாடையும்பூரரமுந்தந்துபோதரவாய்க் .. ... *
காத்தளித்தாதரித்திட்டதல்லாமலுங்கம்பருக்கு... ... *
மாத்தளித்தாட்பட்டுவாழ்வதன்றேதொண்டமண்டலமே... (ஙக)

புறவோடடற்றசைபோக்கியவேந்தன்புரிந்ததிலு ... ...*
மறவோகொடி-துகொடிதுகண்டூரறனன்றுமற்றப் ... *
பிறவோமறுத்துரைசெய்யான்மிகச்சிரம்பேர்த்துவைத்த ... *
மறவோனைத்தாங்கியவையமன்றேதொண்டமண்டலமே ... (சஅ)

(மே - ள்)

தலையிந்தாவெனுமைந்தாதாலோதாலேலோ ... .. *
தண்குன்றைப்பதியெல்லாதாலோதாலேலோ ... ... *

வெண்பா.

ஆலெங்கேயங்கேயரும்பறவையாற்றுயிலு ... ... *
மாலெங்கேயங்கேமலர்மடந்தை — சேர்லெதொறுஞ்... .. *
செங்கேதகைமணக்குஞ்செங்குன்றையெல்லனெங்கே .. *
யங்கேயிரவலெல்லாம் .. .. *
வள்சிலைப்பெருமாணச்சர்சாத்தர்வழுதிமுதற்... ... *
றள்ளுவனூர்க்குந்தலையானபேரையுந்தன்னுரையை .... *
விள்ளுவனூர்க்குந்திருக்காஞ்சிவாழ்பரிமேலழகன் .... *
வள்ளுவனூர்க்குவழிகாட்டிலுன்றேண்டமண்டலமே .. (சக)

(மே- ள்) வெண்பா.

தருமர்மணக்குடையர்தாமத்தர்நச்சர் .. ... *
பரிமேலழகர்பருதி — திருமலையர் ... . *
மல்லர்கவிப்பெருமாள்காளிங்கர்வள்ளுவர்நூற் ... ... *
கெல்லையுரைசெய்தாரிவர் ... ... *

இதுவுமது.

பாலெல்லாநல்லரவின்பாலாமோபாரிலுள ... ... *
நூலெல்லாம்வள்ளுவர்செய்நூலாமோ — நூலிற் .. ... *

பரித்தவுரையெல்லாம்பரிமேலழகர் .. .. *
தெரித்தவுரையாமோதெளி ... ... *
கண்ணுலென்னெஞ்சத்தழுக்கறுத்தேகடையேன்றனையுந் ... *
தண்ணருங்கூவிக்கடிமைகொண்டேதமித்தாண்டருளி ... *
பெண்ணருங்காஞ்சித்திருக்குறிப்புத்தொண்டனென்னுந்தெய்வ *
வண்ணர்வடிவுகொடுபோந்ததித்தொண்டமண்டலமே ... (சஉ)

மே - ள் - திருத்தொண்டத்தொகை.

திருக்குறிப்புத்தொண்டர்தம்மடியார்க்குமடியேன் ... ... *

புராணசாரம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கொந்தலர்பூம்பொழிற்கச்சிநகரோகாலிக் ... ... *
குலத்தலைவர்தவர்குறிப்புக்குறித்துளார்பால் ... ... *
வந்திறைவர்நமக்கின்றுதாரீராகில் ... ... *
வருந்தாமுடலெனவாங்கிமாசுநீத்த ... ... *
கந்தைபுலராதொழியமழையுமாலைக் ... ... *
கடும்பொழுதுவரக்கண்டுகலங்கிக்கன்மேற் ... ... *
சிந்தைமுடிபுடைப்பளவிற்றிருவேகம்பர் ... ... *
திருக்கைகொடுபிடித்துயர்வான்சேர்த்தினரோ .. ... *
சயிலத்திருமூலப்பானுறுமட்டுண்டதண்டமிழாற் ... *
குயிலப்பணிகொண்டுவெந்தறமாண்டகுடத்திலென்பை .... *
யயிலப்பொருகண்ணதிரூபமென்கிளியாக்குவித்த .. ... *
மயிலப்பதியுஞ்சிவனேசருந்தொண்டமண்டலமே ... (சந)

(மே - ள்) பெரியபுராணம்.

தம்மையுள்ளவாறறிந்தபின்சங்கரற்கடிமை ... ... *
மெய்ம்மையேசெயும்விருப்பினின்மிக்கதோரன்பாற் .. *
பொய்ம்மைநீக்கிமெய்ப்பொருளிதுவெனக்கொளுமுள்ளச் ... *
செம்மையேபுரிமனத்தினர்சிவநேசனென்பார் ... .. *

திருக்கடைக்காப்பு.

மட்டிட்டபுன்னையங்கான்மடமயிலைக் .. ...*
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சுரமமர்ந்தா .. ... *
னெட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க் .. ... *
கட்டிட்டல்காணுதபோதியோபூம்பாவாய் .. ... *

பிணிக்கோர்மருந்தினையார்வாயிலாரன்றுபிஞ்ஞகனூர் ... *
பணிக்கோர்குறைவின்றியந்தரியாகத்திற்பண்ணுவித்த ... *
வணிக்கோயிலும்பொற்சிகரமும்வீதியுமாடரங்கு ... ... *
மணிக்கோபுரமுமுடையதென்பார்தொண்டமண்டலமே ... (சச)

(மே - ள்) திருத்தொண்டத்தொகை.

துறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித் ... ... *
தொன்மயிலைவாயிலானடியார்க்குமடியேன் ... ... *

புராணசாரம் - ஆசிரியவிருத்தம்.

ஞாயிலார்மதிற்றெண்டனுட்டுமேன்மை .. .. *
நண்ணுமயிலாபுரியின்வேளாண்டொன்மை ... ... *
வாயிலார்மலிவில்லானடியேபோற்றி ... ... *
மறவாமைதலைநின்றமனமேசெம்பொற் ... ... *
கோயிலாவுயர்ஞானம்விளக்காநீராக் ... *
குலவியவானந்தமன்பேயமுதாக்கொண்டு ... ... *
தாயிலானிருசரணநிகழவேத்துந் ... ... *
தன்மையாரருள்சேர்ந்தநன்மையாரே ... ... *
பேணியசெந்தமிழ்த்தாதனுக்கேயன்புபெற்றமையா ... *
ணியகம்பன்சிவிகையுந்தாங்கிநயந்ததமிழ் ... ... *
பூணியநின்றதும்பொச்சாப்பிலாதுபுகுந்துபின்னும் ... *
வாணியத்தாதற்குத்தாதானதுந்தொண்டமண்டலமே ... (சடு)

(மே - ள்) கட்டளைக்கலித்துறை.

ஒங்கியசெந்தமிழ்த்தாதற்கடிமையவ்வூரதனு ... ... *
லுங்கவிசொல்வதுமில்லையென்றேகம்பனுடன்சொல்ல .. *
வாங்கவனேறுஞ்சிவிகைசுமந்துமடைப்பையிட்டுந் ... *
தாங்கவிகொண்டதுங்கூவந்தியாகசமுத்திரமே ... ... *
பட்டாபிடேகம்பரித்தார்க்குண்டோவிந்தப்பான்மைகெடக் *
கெட்டார்கவிசொல்லிவந்தோர்க்கெல்லாம்பொற்கிழியனைத்துந் *
தட்டானுதவிடுங்கூவந்தியாகசமுத்திரத்தின் ... ... *
மட்டார்கவிகொண்டமண்டலங்காண்டொண்டமண்டலமே (சஎ)

(மே - ள்) கட்டளைக்கலித்துறை.

மட்டாருஞ்செங்கழுநீர்மணிமார்பாவாழ்த்துமந்தக் ... *
கிட்டாதயாசகர்கிட்டிவந்தாலதைக்கேட்டுமுன்னுட் ... .. *

பட்டோலைவாசித்தவரவர்க்குள்ளபரிசெல்லாந்... ...
தட்டானளிப்பதுங்கூவந்தியாகசமுத்திரமே... ... (சசு)

தன்னுலிசைபெறக்கூவந்தியாகசமுத்திரமென் ...
றந்நாளொருவனெடுந்தூண்டிலிட்டிடவாங்கொருமீன்...
பொன்னுலகமதுப்பொருந்திடச்சேர்த்துப்புகழ்கொண்டதான்
மன்னுலகத்துமன்னியசீர்த்தொண்டமண்டலமே... (சஎ)

(மே - ள்) வெண்பா.

இடுவார்சிலருமிடாதார்பலரும்... .. ...
வடுவிலாவையத்திருக்கப் - படுபாவி ... ...
கூவத்துநாரணனைக்கொன்றுயேகற்பகப்பூங்... ...
காவெட்டலாமோகரிக்கு.. ... ...

ஈட்டாலமன்னவன்பின்னேயதியவெனக்கெனமுன்...
கேட்டானதற்குமுன்சென்றதவ்வாருயிர்கேட்டவர்க்கு...
நீட்டாவிடினுந்தனக்கெனக்கேட்பினுநெஞ்சமுப்ய ..
மாட்டாதிரண்டுமுன்கற்றிலதோதொண்டமண்டலமே. (சஅ)

உளத்துத்தயையற்றவோர்புலவோனுக்குடையுதவி...
குளத்துப்புனலுடுத்துநின்றேபின்புகூவியவைக்...
களத்துப்புகுதக்கலியுடுத்தேகாயேறிவந்த... ...
வளத்துப்புகழ்பெற்றவல்லாளனுந்தொண்டமண்டலமே. (சஉ)

வில்லேச்செருப்பிட்டகாலாலுதைத்துவியனுலகிற்...
சொல்லற்கரியபுகழ்கொடுத்தோன்றுட்டவீரன்றன்னுற் ...
பல்லக்கிலேயன்றிமண்படுமோவெனும்பாடல்கொண்ட...
வல்லப்பதிகச்சியப்பனும்வாழ்தொண்டமண்டலமே. (நும)

(மே - ள்) வெண்பா.

மண்படுமோவெய்யலிலேவாடுமோபுல்லிரு... ...
கண்படுமோவன்பாகக் கற்றவற்கு - மண்புகழ ...
மெச்சியப்பாலும்புகழும்வீறுவல்லியாளவந்த... ...
கச்சியப்பனையுதைத்தகால்... ... ...

மிண்டாவெல்லும்வளர்சிங்காயன்விலைகொடுப்பத்...
தண்டமிழ்மேகமுறத்தூரில்வேதியன்முனும்விற்பக்....

கொண்டவன்பின்சென்றுமண்டலத்தேபுகழ்கொண்டபிரான்
வண்டமிழ்க்கும்பனனதாரியுந்தொண்டமண்டலமே... (நிக)

(மே - ள்) வெண்பா.

கம்பனென்றுங்கும்பனென்றுங்காளியொட்டக்கூத்தனென்
கும்பமுனியென்றும்பேர் கொள்வரே - யம்புவியின்... [றுங்
மன்னுவலர்புகழும்வாயலனதார்ரியப்ப... ...
னந்தாளிலேயிருந்தக்கால்... ... ...

கொல்லியிற்பாற்பசுமேய்ப்போன்கறப்பவன் கொண்டுசெ
யெல்லியிற்சேர்ப்பவன்பாலிவோனிவையித்தனையுஞ். [ன்றே
சொல்லியிற்பாவலனோர்கவிசொல்லச்சொல்லநல்கும்...
வல்லியிற்காளத்திவாழ்வானதுந்தொண்டமண்டலமே... (நிஉ)

(மே - ள்) வெண்பா.

பள்ளமேசெய்புட்பயிரையெல்லாங்கொள்ளுமுடி..
வெள்ளமேயும்மைபுனாம்வென்றுமே - புள்ளலம்பும்...
பொற்காவிவாவிவல்லிப்பூபதிகாளத்தியெனு... ...
நற்கார்நெடுமுடியைநட்டு... ... ...

கட்டளைக்கலித்துறை.

பெற்றுளொருபிள்ளையென்மனையாட்டியப்பிள்ளைக்குப்பால்
பற்றுதுகஞ்சிருடிக்குந்தரமன்றுபாலிரக்கச்... ...
சிற்றுளுமில்லமற்றெல்லாவறுமையுந்தீரவொரு... ..
கற்றுதரவல்லியோவல்லமாநகர்க்காளத்தியே... ...

இதுவும்.

வழிமேல்விழிவைத்துவாடாமலென்மனையாளைமற்றோர்
பழியாமற்பிள்ளையும்பாலென்றழாமற்பசியொனுஞ்சொன்...
மொழியாமலென்னைவரவிட்டபாவிமுகித்துச்சதை...
சழியாமலாவளித்தான்வல்லமாநகர்க்காளத்தியே.. ...

சிருறும்பாடல்பன்னீராயிரமுஞ்செழுந்தமிழ்க்கு...
வீரர்தஞ்சங்கப்பலகையிலேற்றியவித்தகனூர்... ..
பாரதம்பாடும்பெருந்தேவர்வாழும்பழம்பதிகாண்...
மாருதம்பூவின்மணம்வீசுதொண்டமண்டலமே.. (நிரு)

(மே - ள்) வெண்பா.

கடல்கிழியவோடுங்கலம்போலவொன்னு... ...
ருபுல்கிழியவெள்வாள் விதிர்த்து - மடல்கிழியும்...
பைம்பொற்றுர்மன்னர்படைதடுவேயோடிற்றே ...
செம்பொற்றண்டேந்தினன்றோர்.. ... ..

சொல்லாயுமௌனவபரிவாய்தனக்கிட்டசோறுலக...
மெல்லாம்பெறுமென்றுபாட்டோதப்பெற்றவளின்னருளாற்...
கல்லாரத்தற்றிக்கிணறேறிப்பாயுங்கழனிபெற்றூன்..
வல்லாண்மைபூதமகிபாலனுந்தொண்டமண்டலமே... (நுச)

(மே - ள்) வெண்பா.

வரகரிசிச்சோறும்வழுதுணங்காய்வாட்டு.. ...
மூரமூரலுறும்புளித்தமோருங் - விரகுடனே ...
புள்ளலர்ப்பூதன்புகழ்ந்தவிருந்திட்டா... ...
னெல்லாவுலகும்பெறும்... ... ...

ஆரரன்முடியுமிக்காரியந்தோடவிழாத்திமலர்த்...
தாரானேவம்பின்றொடையானேப்பெண்ணையத்தாமனையும்...
போராடிக்காவலில்வைத்தவப்பாட்டும்புனைந்ததன்றே...
வாராருமோட்டிளங்கொங்கைதல்லாய்தொண்டமண்டலமே. (நுடு)

குழுவார்குடிமக்களானகண்ணுளர்குறும்படக்கி...
யெழுவாயமைந்தமனுநீதியாற்பதினெண்மரபு... ...
முழுவானரித்துக்கிடந்துவிடாமலுலகுக்கெல்லாம்...
வழுவாதமைக்கவும்வல்லதீதொண்டமண்டலமே... (நுசு)

அழுவதுங்கொண்டுபுலம்பாதுநஞ்சுண்டதுமறைத்தே...
மொழுவதுங்கொண்டுபுகழ்க்கம்பநாடனெழுப்பவிசை...
முழுவதுங்கொண்டொருசொற்பேசநெய்யின்முழுகிக்கையின்
மழுவதுங்கொண்டுபுகழ்கொண்டதாற்றொண்டமண்டலமே(நுஎ)

(மே - ள்) வெண்பா.

ஆழியான்பள்ளியணையேயவன்கடைந்த.. ...
வாழிவனாயின்மணித்தாம்பே - யூழியான்... ...
பூணையப்பூணன்புரமெரித்தபொற்சிலையி.. ...
ணேணயல்லநட... ... ...

நேயத்துடன்பிறந்தோன்பிணமூடிநெருப்பவித்தித்...
தாயொப்பெனவெதிர்கொண்டழைத்தேதன்னுடனெனவே...
யாயத்தமிழ்கொண்டருங்கவிராயனுக்கன்புசெய்த..
வாயற்பதியில்வடகனும்வாழ்தொண்டமண்டலமே ... (நுஅ)

(மே - ள்) கட்டளைக்கலித்துறை.

தன்னுடன்கூடப்பிறந்தசகோதரத்தம்பியுயி...
ரந்நிலைமாண்டதுதோன்றுமன்மூடிவைத்தன்னமிட்டான்...
மன்னவர்போற்றிடவாழ்செங்கலங்கைவடகனுக்குக்...
கன்னனுஞ்சோமனுமோவிணையாகக்கழறுவதே..... ...

நெடுகவிரித்துப்பிணமூடிஞான்மகனீயெனில்வா...
கடுகவெனக்குமுன்மூந்தவென்றேயோர்கவிதைசொல்ல...
மூடுகவழைப்பமனையாள்பிணந்தனைமூடிச்சென்ற... ..
வடுகனளித்தமகன்வாயலான்றொண்டமண்டலமே.. (நுக)

(மே - ள்) வெண்பா.

மூந்தவினையோன்மாளமுத்தமிழோற்கன்னமிட்ட...
வந்தவடுகன் மகளுயின் - வந்தென்... ... ...
றலைக்கலியாணத்துக்கேதான்பிணத்தைமூடி...
யிலக்கணமாச்செய்குவைநீயே... ...

பயிரைப்பெரும்பன்றிதின்றதற்காகப்பரிசனத்தோ...
ருயிரைப்பருகியுடலவர்க்கீயவொருபுலவோன்..
செயிரப்புடைத்தநந்தானேபொறுத்தந்தச்செய்யுதவும்...
வயிரப்பனென்பவன்வாழ்வானதுதொண்டமண்டலமே.. (சுo)

ஈரக்கருக்கரிவாள்கொண்டுபோகையிலின்புலவோ...
னேரொக்கவேதின்றுவண்டோலிடுமெனநின்றுதனஞ்.. [லாம்
சேரக்கொடுப்பவொன்றில்லா மன்மன்னவன்செம்பொன் னெல்
வாரிக்கொடுக்கத்தணியவல்லான்றொண்டமண்டலமே... (சுக)

(மே - ள்) வெண்பா.

வண்டோலிடுந்தொண்டமண்டலத்தானேதியாக...
முண்டோவிலையோவுரை.. ... ...
பண்டைநிகண்டுநிவாகரம்பிங்கலம்பன்னிரிச்சொ...

லெண்டிசையின் சொல்வடமொழிசெய்யுளெல்லாமுணர்ந்தே...
தண்டமிழ்கொண்டு நிகண்டுசூளாமணிதானுரைத்த...
மண்டலவன்குடிகொண்டதுநீடொண்டமண்டலமே... (சுஉ)

காரார்களந்தைப்புகழேந்திசோன்னகலம்பகத்தி...
னேரானதையும்படியென்றபாடலேநெரியர்கோன்.. ...
சீராகச்செப்பியநற்பாடல்கொண்டவன்செஞ்சியர்கோன்...
மர்ராபிராமனங்கொற்றந்தையூர்தொண்டமண்டலமே... (சுஊ)

(மே - ள்) விருத்தம்.

தையும்படியேநாங்கொற்றநங்கோன்செஞ்சிவளாமீதே...
யையம்பெறுநுண்ணிடைமடவாயகிலின்றாபமுகிலன்று...
பெய்யுந்துளியோமழையன்றுபிரசத்துளியேபிழையாது ...
வையம்பெறினும்பொய்யுரைக்கமாட்டார்தொண்டநாட்டாரோ ..

தாறற்றசெந்தமிழோப்பாரியென்னுந்தமிழ்புனைந்தோன்
சேறைப்பதிசந்த்ரசேகரவாணன்முன்சென்றவந்நாள்...
வீறுற்றனன்றுவோளாளரைமன்விலங்கிலிட... ..
மாறற்குவந்துமுடிசூட்டினுன்றொண்டமண்டலமே... (சுச)

(மே - ள்) கட்டளைக்கலித்துறை.

ஒப்பாரியாய்நின்மகவைத்தெருவிலொருத்திகண்டே...
யப்பாவெனவெடுத்தாளணைத்தாளன்னேதானுமென்று...
டப்பாதன்மைந்தனென்றுனங்குனைதலைசாய்த்துநின்றுள்...
செப்பாயவளெவள்காண்சேறைவாழ்சந்த்ரசேகரனே...

தன்னூர்ச்சனகையிற்சன்மதிமாமுனிதந்தமைந்த ...
னன்னூலுரைத்தபவணந்திமாமுனிதற்பதியுஞ்... ...
கின்னூலுரைத்தருணவீரபண்டிதன்சேர்பதியு... ...
மன்னூபுரத்திருவன்னமின்னேதொண்டமண்டலமே... (சுடு)

(மே - ள்) அகவற்பா-

மலர்தலையுலகின்மல்கிருளகல... ...
பவணந்தி, யென்னுநாமத்திருந்தவத்தோனே ...

(இதுவுமது) வெண்பா.

பண்பார்கவிஞர்வியந்தெடுத்தபாட்டியலே.. ...
வெண்பாவந்தாதி விளம்பினன் - மண்பாவும்... ...

கோடாதசீர்த்திக்குணவீரபண்டிதனும்...
பீடார்களத்தைப்பிரான்...

ஊரார்மலிபுலியூர்க்கோட்டநற்குன்றத்தூரிலுள்ள...
தீரார்வளமலிபாக்கிழவோன்புகழ்ச்சேக்கிழவோன்...
காராளன்கூடற்கிழவோன்முதுமொழிகாஞ்சிசொற்ற..
வாரார்புரிசைக்கிழவோனும்வாழ்தொண்டமண்டலமே... (சுசு)

நீண்டார்வணங்குந்திருவாலங்காடற்குநெல்லூரதே...
வேண்டாவெனக்கிந்தக்கூழேயமையென்றுவேண்டியசூ...
ழாண்டாரொருவரறுபத்துமூவரிலன்புவைத்து...
மாண்டாரவர்க்குவளநாடுநீடொண்டமண்டலமே.. (சுஎ)

நன்றுரும்விளைந்ததைவேதியற்கேந்தநன்மையினற்...
பொன்றுன்விளைந்திடநெற்பாலவேயதைப்போரடித்துக்..
குன்றுக்குவித்ததைநெற்பரிமாற்றங்கொடுத்தளித்தான்..
மன்றுர்களந்தைக்குடிதாங்கியுந்தொண்டமண்டலமே... (சுஅ)

(மே - ள்) வெண்பா.

பொன்செல்லியெல்லாம்பொதிப்பொதியாய்ப்பூசுரற்குச்
செந்நெல்லேபோலச்சிறந்தளித்தான் - பன்னகத்தின்...
சீரார்மணியைவிலைசெய்யானுஞ்செய்யகளத்...
தூராளுஞ்செய்கருமமொன்று... ... ...

வெங்கொலைக்கஞ்சியடைக்கலந்தான்புகவேந்தன்மைந்த
னுங்கலியாமமொளித்துவைத்தேதன்னெருமகவை...
யிங்கிவன்முனவனென்றேயடையலர்க்கேந்துவிட்டான் ...
மங்கலஞ்சேர்கிடங்கிற்பெருமான்றொண்டமண்டலமே.. (சுசு)

(மே - ள்) விருத்தம்,

வந்தவுயிர்தனையளித்தான்கிடங்கில்வேந்தன்...
வயலிழானறமடங்காதெனவுரைத்தான்... ...
செந்தமிழோர்கிளைவளர்த்தான்வேளூர்மன்னன்... ...
செம்பியன்முன்வயிறிடந்தான்பேரையூர... ...
னந்தமுளநாணல்நீத்தான்விடுராதி... ...
யடையாதவாசலானிடையாலத்தா... ...

னந்தனுடனமுதுண்டான்பேராவூரா... ...
னடைப்பரியாயிரங்கொடுத்தானுறையானே... ..

எண்ணுன்கறந்தொண்டமண்டலத்தார்க்கன்றியில்லையென.

தண்ணுர்வயலுழன்முன்சொலவேந்தன்றலைதடிந்த... ...
தெண்ணுமன்மன்னனுமப்படியேசொலவிப்படியின்...
மண்ணுளும்வேந்தன்வரிசைபெற்முன்முண்டமண்(டலமே எ)

(மே - ள்) வந்தவுயிர்தனையென்னும் பாடலிற்காண்க.

கோவூருழவுக்குடியானவன்றன்குமிழம்பட்டு...
வேவூர்க்கிழானெருவேளாளன்பஞ்சம்விடியளவு ...
நாவூரிலுள்ளபுலவோர்க்குந்தேசத்தநாவலர்க்கு ...
மாவூருமன்னங்கொடுத்தளித்தான்முண்டமண்டலமே... (எக)

(மே - ள்) ஷி பாடலிற்காண்க.

நறுங்கூழெனையன்றியுண்டனையோவெனநாணிவயி...
றிறுங்கூர்நுதிவடிவாளாற்பிளந்திட்டிருங்கரினை... ...
யுறுங்கூழ்புறத்திலிருந்தானுக்குப்பத்துப்பிலாதபுற்கை...
வறுங்கூழ்சொரிந்திட்டமுற்றவுண்டான்முண்டமண்டலமே(எஉ)

(மே - ள்) ஷி பாடலிற்காண்க.

போதாருந்தண்பொழில்வீடுரதிபன்புலவர்க்கெல்லாந்...
தாதாவெனக்கொடிகட்டுதலாலவன்றன்மனையை ...
நீதாவெனவொருபாவாணன்கேட்பவந்நேரிழையை...
மாதாவெனவழைத்தானென்கொலாந்தொண்டமண்டலமே. (எங)

(மே - ள்) அந்தமுளநாணளித்தான்வீடுராதி.

கடைவாயலினின்றியாசகர்கூப்பிடக்காதிலது...
தடையாயவனும்பசியால்வருந்தத்தடையகற்றி... ...
யடையாதவாசலுடையானெனும்பெயராதரித்தான்...
மடையார்கழனியிடையாலத்தான்முண்டமண்டலமே... (எச)

(மே-ள்) ஷி பாடலிற்காண்க.

தையார்மழையுந்தபனனும்போலத்தடையுமின்றி...
யுயாதநீசனெடுண்டமையாலுமொருனமின்றித்...
தினையார்புவியிற்புகழேபடைத்துதிந்நிலமும்...
வரையாதவன்னன்மைகாட்டுவதாற்முண்டமண்டலமே... (எடு)

(மே-ள்) நந்தனுடனமுதுண்டான்பேராளூரான்.

கூற்றூர்புலவனெருபரிகேட்பக்கொடைமதத்தா...
லாற்றூர்க்கிழான்பரியாயிரமீந்தனனுதலினுல்.. ...
வேற்றூர்பலவிதுநம்மூரெனும்படிவெம்பசியை ...
மாற்றூர்பலவுளமண்டலங்காண்டொண்டமண்டலமே ... (எசு)

(மே - ள்) நடைப்பரியாயிரங்கொடுத்தானுறையானே.

எதிலுந்தொண்டர்க்கிசையாதனகுற்றமின்பஞ்செய்தாற்
றீதிலுநன்மைபெறலாமெனவையந்தேறத்தெவ்வைச்..
சூதிலும்வென்றுபுலனைந்தும்வென்றெமதூதனையும் ...
வாதிலும்வென்றுவருமூர்க்கருந்தொண்டமண்டலமே... (எஎ)

(மே - ள்) நாட்டமிகுதண்டிக்குமூர்க்கருக்குமடியேன்.

இதுவுமது தேவாரம்.

தொண்டவளநன்னாட்டுவேற்காட்டூர்வாழ் .. ...
தொல்லுழவர்நற்சூதர்சூதுவென்று... ..
கொண்டபொருள்கொண்டன்பர்க்கமுதளிக்கும்.. ...
கொள்ளையினுற்றிருக்குடந்தைக்குறுகியுள்ளார்.. ...
மிண்டிசைவுகுழறுமொழிவீணர்மாள... .. ...
வெகுண்டிலான்மூர்க்கனெனவிளம்புநாம... ..
மெண்டிசையுமிகவுடையாரண்டரேத்து ... ...
மேழலகுமுடலுளுயிரல்பிழையோ... ...

மெய்ப்பார்மனவியைக்கொள்வாருமற்றுவிளக்குமூட்டக்
கைப்பாணிகொண்டுகழுத்தீர்ந்துதிரங்கலத்துளட்டி..
பொய்ப்பார்புகழவகல்விளக்கோடுபுகழ்விளக்கு.. ...
வைப்பார்கலியர்திருவொற்றியூர்தொண்டமண்டலமே... (எஅ)

(மே - ள்) விருத்தம்.

தடமலர்சூழொற்றியூர்நகருள்வாழுஞ்... ...
சக்கரப்பாடியர்குலமெய்த்தவமாயுள்ளார் ... ...
படர்புகழார்கலியனூர்நலியுங்கூற்றைப்.. ...
பாய்ந்தவற்குவிளக்கெரிக்கும்பரிவான்மற்றே.. ...
ருடலிலாய்ச்செக்குழல்வார்க்கதுவுநேரா... ...

தயர்மனவியைக்கொள்வாருளருமின்றி ... ...
மிடற்றுதிரங்கலனிறையவரியநாதன்.. ....
வியன்கைகொடுபிடிப்பவருண்மேவினரோ.. ...

இதுவுமது திருத்தொண்டத்தொகை.

கைதடிந்தவரிசிலையான்கிக்கம்பற்கடியேன்.

கொத்தலர்கோதைவியன்பாண்டிமண்டலக் கொம்பைத்தம்
வைத்திருந்தாங்கவடன்கேள்வன்றேடிவரவவற்கே... [பால
யுய்த்திருவோர்க்கும்வரிசையுமாற்றியுடனுஞ்சென்று
மைத்தனக்கீண்மைபடைத்ததன்றேதொண்டமண்டலமே (எக)

மோதிச்சிவந்தகவிகாளமேகமொழிந்தவெண்பா
பாதிக்குமுந்திப்பரிசளித்தோன்களப்பாளனெனு
மாதிக்கம்பெற்றவனூர்முதலியரசிருப்பா
மாதிக்கெலாம்புகல்கின்றதொல்சீர்த்தொண்டமண்டலமே (அ)

(மே - ள்) வெண்பா.

உள்ளங்கால்வெள்ளெலும்புதோன்றவொருகோடி
வெள்ளங்காலந்திரிந்து விட்டோமே தெள்ளுதமி
ழாமூர்முதலியரசர்பிரானிங்கிருக்கப்
போமூரறியாமற்போய்

வேலியழித்துக்கரும்பையெல்லாந்தின்னவிட்டிரவோர்
கள்ளில்லணக்கமுஞ்செய்தேத்திப்பின்னுங்கரும்புதின்னக்
கூலியளந்துகொடுத்தாளுருவன்குமணனைப்போல்
வாலிதின்மிக்கொடையாளனுந்தொண்டமண்டலமே (அ)

உணலப்பசும்பொன்முதலானவற்றையுதவிப்பின்னுங்
குணலச்சையுள்ளவர்கேட்கவுங்கூசுவர்கொல்லெனவே
யெணலக்கருதியெழுநிலைவப்பினெவின்மறைந்து
மணலப்பரப்பியமுன்றிலுள்ளான்றொண்டமண்டலமே. (அ)

பன்னுந்தமிழ்க்கவன்மாமனேதாதிபரிசளிப்ப
மூன்னம்பிகாளிக்குநெற்குன்றவாணமுதலியென்போன்
பின்னுஞ்சிலபொன்னுங்கொடுத்துத்தன்பேர்நிறுத்த
மன்னுந்தமிழ்மூமனாத்தானவன்றொண்டமண்டலமே (அ)

(மே-ள்) கட்டளைக்கலித்துறை.

கற்குங்கவிவல்லியாதவர்கோனம்பிகாளிக்கியாம்
விற்கும்பரிசனமாகிவிட்டோம்வடவேங்கடமும்
பொற்குன்றமும்புகழ்ங்காதியும்பொதியமும்மேரு
னெற்குன்றமுநம்மரபுமெந்நாளுநிலைநிற்கவே
சிரொன்றுதேவர்முதலாதலாற்றில்லைவாழ்முதலி
யாரொன்றுநாமம்படைத்தபோன்மற்றவருமந்தப்
பேரொன்றுபெற்றதுவேளாண்முதன்மையைப்பெற்றல்லவோ
வரொன்றுபூண்முலையாயெளிதோதொண்டமண்டலமே (அச)

கசிட்டன்புடையவிராவணன்வீழக்கயிலையுறைந்
தசிட்டன்றிருவடித்தாமரைப்பூசிக்கச்சார்ந்தபசு
விசிட்டந்தருமுலைப்பாலாறுகொண்டுவிருப்பமுடன்
வசிட்டன்றவஞ்செய்தமண்டலந்தாண்டொண்டமண்டலமே (அடு)

(மே-ள்) விருத்தம்

கழிந்தபற்றுடைவசிட்டனதிருக்கையாங்கவிஞர்
மொழிந்தநந்தியம்பெருவரைமொய்த்தசூன்முகில்கள்
பொழிந்தநீரதுபொற்புறுதாழியிற்பொங்கி
வழிந்தபாலெனத்திசைதொறுமிழிந்ததுமன்னே

வெல்லாமல்வென்றுநற்சந்தனக்காட்டதின்மேலிருந்து
நல்லாறைநந்திக்கல்பகங்கேட்டபினற்றுணைக்குக்
கொல்லாபுரிசந்திரன்மாமுடிசூட்டக்குடைகவித்து
மல்லார்புரித்தொண்டமானைதந்தொண்டமண்டலமே (அள)

(மே-ள்) கட்டளைக்கலித்துறை

நேற்றினுமின்றுமிருந்தகாதனிலெனுங்கூன்
கூற்றினுமன்னைக்கொடியள்கண்டாய்மள்ளர்கொன்றபழஞ்
சேற்றினுமேதிக்குளம்பானெருக்குண்டசெங்கருப்பஞ்
சாற்றினுஞ்சங்கந்தவழுங்கொல்லாபுரிசந்திரனே

அந்தப்புரமுமறுநான்குகோட்டகத்தாருமொன்றுய்க்
கந்தப்புராணம்பன்னீராயிரஞ்சொன்னகச்சியப்பர்
தந்தப்பல்லக்குச்சிவிகையுந்தாங்கியச்சந்நிதிக்கே
வந்தப்புராணமரங்கேற்றினர்தொண்டமண்டலமே (அஎ)

உறைவாளரசனுறப்பானென்றஞ்சியொளித்ததுவும்
பிறவாமல்வைத்தவர்பேணுதலாலவர்பேர்பூண்ந்து
திறவாணிபர்முதற்சாதியுள்ளோரன்றுசெய்தநன்றி
மறவாமலின்னமும்பாராட்டிநிற்தொண்டமண்டலமே (அஅ)

மேதைப்புலவனொண்மேகாம்பரசம்புமெய்ச்சனெடுங்
காதைப்புலவரிரட்டையர்பாடுங்கலம்பகமு
மோதற்கரியநல்லேகம்பவாணருலாவுமந்த
மாதைப்பனுவலும்பாராட்டிநிற்தொண்டமண்டலமே (அக)

(மே-ள்) கட்டளைக்கலித்துறை

எறிக்கும்புகழ்க்கச்சியேகாம்பரசம்பனெண்டிசையும்
பொறிக்கும்புலிக்கொடியான்புயம்வேட்டபின்பூவையன்னள்
வெறிக்குங்குமக்கொங்கைமீதேவிழிசொரிவெள்ளந்துள்ளித்
தெறிக்குந்திவலியழிக்குஞ்சிந்தூரத்திலதத்தையே

தாளாண்மையுள்ளபுகழ்கிருஷ்ணராயன்சமுகத்திலே
வேளாண்மகளிரைப்போலேவிநோதித்துவேடங்கொண்டு
கோளார்வயிரியர்கூத்தாடத்தங்கள்குடிமையெண்ணி
வாளாலவனுயிர்மாய்த்ததன்றேதொண்டமண்டலமே (கூ)

தருவுற்றகாளத்திகச்சியந்தாதியுந்தண்டமிழ்த்தேர்
திருவொற்றியூரிற்குறுந்தொகைதானந்திரைகடற்பொ
ருவுற்றகச்சிமலிதேனமுன்புகல்கவியு
மருவுற்றகூந்தன்மின்னேயுண்டோண்டொண்டமண்டலமே (கூக)

(மே-ள்) காளத்தியுங்கயிலாயமுநேரென்பர்

அறந்தானியற்றுமவனிலுஞ்சோடியதிகமில்லம்
ஒருங்குகடலுடுத்தவொற்றியூரே
மலிதேரான்கச்சியுமாகடலுந்தம்மு
ளொலியும்பெருமையுமொக்கும்

பண்டையோர்நாளையிலோரேழ்கலிங்கப்பரணிகொண்டு
செண்டையுமேருவிற்றீட்டிவித்தோன்கழற்செம்பியன்செப்
தொண்டநன்னாடுபுரக்கின்றகோனந்தித்தோன்றலெங்கள்
வண்டையர்கோனங்கருணாகரன்றொண்டமண்டலமே (கூஉ)

(மேள்) விருத்தம்

இறைமொழிந்தளவிலெழுகலிங்கமிவை
பெறிவனென்றுகழறொழுதனன்
மறைமொழிந்தபடிமரபில்வந்தகுல
திலகன்வண்டைநகரரசனே

தேர்கொடுத்தோனும்பரிகொடுத்தோனுந்திருமனையிற்
சூர்கொடுத்தோனுந்தலைகொடுத்தோனுந்தமிழினுக்கா
ஓர்கொடுத்தோனுமுயிர்கொடுத்தோனுமூதைகொடுக்க
மார்கொடுத்தோனுமனமேவருளார்தொண்டமண்டலமே (கூஙு)

தனாத்தியாகராயர்முன்சுந்தரர்க்காவொருதூதுசென்ற
விளாத்தாமராமணம்வீசுதல்போல்விடப்பாய்சுருட்டி
திளாத்தாவணத்திலொருபுலவோன்பின்புசென்றசெந்தா
மரைத்தாண்மணமின்னதாறுங்கண்டூர்தொண்டமண்டலமே (கூச)

வானப்பிரகாசப்புகழ்க்கிருஷ்ணராயற்குமஞ்சரிப்பா
கானப்பிரகாசப்புகழாய்ந்துகச்சிக்கலம்பகஞ்செய்
ஞானப்பிரகாசகுருராயன்வாழ்ந்துநலஞ்சிறந்த
மானப்பிரகாசமுடையோர்வளர்தொண்டமண்டலமே (கூசு)

மந்தாகினியிற்றிரிவேணிசங்கத்தின்மாண்டொருவன்
மந்தாகினியுற்றபாதாளம்புக்குவணங்கிநின்று
மந்தாகினிக்குமகவாகக்கேட்டவரங்கொடுப்ப
மந்தாகினிக்குமரபானதுந்தொண்டமண்டலமே (கூசூ)

காலியமாகியகாமீகங்கண்டுங்கங்காகுலத்தோ
ரோலியசூத்திரராகவிருபத்துநான்குயர்ந்த
மேலியகோட்டத்திலுங்காரிகாலவளவன்மிக்க
வாலியமேன்மைகொடுத்தளித்தான்றொண்டமண்டலமே (கூஎ)

யுகமேழுகோடியிருபதினிலக்கமுமுள்ளமட்டுஞ்
சகமேழுமேழும்புகழேநிறுத்தித்தமிழ்புணர்ந்து
புகழ்மேழிவாகைப்பதாகையும்வீரப்புலிக்கொடியு
மகமேருவிற்சென்றுதீட்டியதாற்றொண்டமண்டலமே (சஅ)

நாடானகோட்டமிருபத்துநான்கினுணற்றணடகத்
தாடாதசெக்குமடையாதவம்மியுமாகிவளர்
பீடாதிபீடத்திருக்காமக்கோட்டம்பிறங்குகச்சி
மாடாதிபனுங்காலாண்டருந்தொண்டமண்டலமே (கூகூ)

இன்னவர்காலத்திலெத்தனைபேர்மற்றிவர்களுக்கு
முன்னவர்காலத்திலெத்தனைபேரிம்முதலிகடம்
பின்னவர்காலத்திலெத்தனைபேர்கள்பிறப்பவர்முன்
மன்னவர்காலத்தொடர்புடைத்தாற்றொண்டமண்டலமே (ஈ)

நிலைவாழ்வுபெற்றிடும்வேளாளர்வாழிநன்னீருழவு
தலைவாழியேகம்பர்சந்நிதிவாழிசங்காழிதண்டு
சிலைவாழிவாழிதிருநெடுமாறிருவேங்கடமா
மலைவாழியெண்ணெண்கலைவாழிவாழ்தொண்டமண்டலமே (ஈக)

தொண்டமண்டலசதகம்

மூற்றிற்று மூற்றும்.

தகைவந்தசீர்த்தொண்டமண்டலத்தார்தஞ்சரிதையையித்
தொகையென்றொருவர்க்குஞ்சொல்லப்படாதுசொன்னலுமிக்க
தகைவந்திடுஞ்சொற்புலவோர்சபையினிலுமுநம்மால்
வகைவந்தமாத்திரஞ்சொல்லிவைத்தோமிந்தமண்டலத்தேத்.

காவைவென்றிடுகத்தூரிகண்மணிக்கறப்பனென்னு
மாவையம்பதியான்றொண்டமண்டலசதகங்கேட்டு
நாவலர்புகழ்ந்துமெச்சநவநிதிபொழிந்துநன்றுப்
பூவுலகெங்கும்போற்றப்புகழ்நிலைநிறுத்தினானே-

கன்மாரிகாத்தமுதிற்கத்தூரியருண்மாவைக்கறப்பனென்னு
மின்மாரிதனதுகலையத்தனையுஞ்சபைகூட்டிவியந்துகேட்டுச்
சொன்மாரிபொழிந்திடவேசிரகரகம்பிதஞ்செய்தருளுந்தந்து
பொன்மாரிபொழிந்துதந்தப்பல்லக்குச்சுமந்தமிகு புகழ்பெற்றானே.

ஏர்கறப்பவில்லாததொண்டவளநல்லூட்டிவுசிதவேளைச்
சீர்கறப்பொன்றில்லாதசத்தூரிமன்னனருள்சேயைப்பார்மே
லார்கறப்பனென்றுசொல்லியழைத்தானாமவனயன்பினாலே

பேர்கறுப்பல்லிறஞ்சிவப்பன்கீர்த்தியிலுல்வெளுப்பனெனப் பேசு
வோமே

எல்லப்பனம்மையப்பன் றருதிருவேங்கடநாத னெழிற்சீரா
மன், வல்லக்கொண்டையன்மாதை வேங்கடேசுரன்போல வரிசை
செய்தான், செல்வத்தம்பியருடனேகத்தூரிமதன்கறுப்பன்றெரு
வீதிக்கே, பல்லக்குத்தான்சுமந்தா னதுநமக்கோ ராயிரம்பொன்
பரிசுதானே.

இந்தச்சதகமரங்கேற்றுகைக்கிசைந்தேனெவரும்
வந்திக்குமாவைக்கத்தூரிக்கறுப்பன்வளனமபெறு
புந்திக்குலாவுநள்ளாறர்தம்பாதம்பொருந்துமன்பன்
வந்தற்பவிக்கமகிழ்வானதுதொண்டமண்டலமே.

தொண்டமண்டலமாலையும்,
தொண்டமண்டலப்பிள்ளைத்தமிழும்,
நூதனமாகச்செய்துவருகிற,
தொண்டமண்டலவிலுவிடையும்,
பின்னர்அச்சிற்பதிப்பிக்கப்படும்.